# முன்னேற்ற அறிக்கை

# 2023

மகளிர், சிறுவர்  அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு



# மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகவலுவூட்டல் கௌரவ அமைச்சரின் செய்தி

சமூக, பொருளாதார மறுமலர்ச்சியை உறுதி செய்வதற்கான அரசாங்கத்தின் பொறுப்பை நிறைவேற்றும் பணிகள், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அங்கவீனமுற்ற நபர்கள், முதியோர்கள், குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் மனநலன் குன்றியவர்கள் போன்ற சமூகத்திலுள்ள ஒதுக்கப்பட்ட குழுக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் சுமார் 1.2 மில்லியன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களினை பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல் அமைச்சின் பிரதான பணிகளில் ஒன்றாகும்.

அதேபோல நவீன உலகின் தேவைகள் மற்றும் முன்னெடுக்கவுள்ள பயணத்திற்கு ஏற்ப 33% வரையிலான 18 வயதிற்கும் குறைந்த பிள்ளைகளை, வினைத்திறனான தலைமுறையாகக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் பொறுப்பும் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், இலங்கையின் மொத்த சனத்தொகையில் 52% வீதமான பெண்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்து அவர்களின் தற்போதைய சமூக - பொருளாதார நிலையைப் பலப்படுத்துதல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்தல், பாதிக்கப்பட்ட பெண்களின் நலன்புரி மற்றும் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் பொறுப்பும் அமைசை சார்ந்துள்ளது.

மேற்கூறிய, சமூக சேவைகளை வழங்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் சகல பிரிவுகளின் பொறுப்புணர்வை பாராட்டுவதோடு, இச்செயற்பாடுகளை செயல் திறனுடன் நிறைவேற்றுவதற்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்களுக்கும், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட நிறுவனத் தலைவர்கள் மற்றும் பணிக்குழாமிற்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ரணில் விக்ரமசிங்க,**

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர்.,



# மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக பாரிய பணியினை நிறைவேற்றிய 2023 ஆம் ஆண்டில் பெண்கள், சிறுவர்கள் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் முன்னேற்றம் மற்றும் செயற்திறன் அறிக்கைக்கு செய்தியொன்றினை வழங்குவதற்கு வாய்ப்புக் கிட்டியமை மகிழ்ச்சியளிக்கக்கூடிய விடயமொன்றாகும். 2023 ஆம் ஆண்டு, ஏனைய ஆண்டுகளினை விட குழந்தைகள், பெண்களுக்கு சாதகமான முடிவுகள், சட்டங்கள், கட்டளைகள, நீண்டகால திட்டங்களினை எடுப்பதில் அதிக ஈடுபாடு கொண்ட ஆண்டாகும். இதில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற தலைமைத்துவம் மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

மேலும் தற்போதைய உலகப் பொருளாதாரத்தின் அடக்குமுறையான சூழல் மற்றும் வளிமண்டலத்தின் மத்தியிலும், இலங்கையில் முதன்முறையாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவுக்கு அதிகளவான ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருப்பது இவ்வருடமாகும் என்பதுடன், அது ரூபா. 14,829 மில்லியன் (அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு) ஆகும். அரசின் இந்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள், பல்வேறு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் உள்ளூர் வர்த்தக சமூகங்களின் தொடர்ச்சியான ஆதரவுடன் குழந்தைகள் மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்காக ஒரு பாரிய பணியினை எம்மால் நிறைவேற்ற முடிந்துள்ளது.

அனாதைகள், கைவிடப்பட்ட, ஆதரவற்ற குழந்தைகள் சமூகத்திற்காகவும், பாதிக்கப்பட்ட அனைத்து குழுக்கள் மற்றும் அதிக ஆபத்திலுள்ள சமூகத்திற்காகவும் பல அர்ப்பணிப்பு சேவைகள் செய்யப்பட்ட ஆண்டு என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். பெண்கள், அமைதி, பாதுகாப்பு, பாலியல் மற்றும் பாலிய அடிப்படையிலான வன்முறைகளினைத் தடுப்பது போன்ற நீண்டகால திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயல்களினை அமுலாக்குதல் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக தயாரிக்கப்பட்ட நீண்டகாலத் திட்டங்களில் மேல் நடவடிக்கை எடுத்தல், நாம் அனைவரும் கூட்டாக எதிர்காலத்தில் நிறைவேற்றவேண்டிய பணிகளாகும்.

தற்காலிக பெண்கள் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் பொறிமுறையினை திறம்பட மற்றும் திறமையாக முன்னெடுத்துச் செல்லுவதற்கு அவற்றின் பௌதிக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துல், தரமான சேவைக்காக மனித வளத்தினை மேம்படுத்துவதற்குத் தேவையான பல பணிகளினை எம்மால் நிறைவேற்ற முடிந்துள்ளது.

நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையான சதவீதமானவர்களாக குழந்தைகள் மற்றம் பெண்கள் விளங்குகின்றனர். அவர்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கைத் தரமொன்றினை வழங்கும் தேசிய பொறமுறையின் முன்னோடிகளாக, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருவதுடன், அது தொடர்பில் தங்களின் உதவியினையும் மற்றும் செயலூக்கமான பங்களிப்பினையும் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

**கலா கீர்த்தி கீத்தா சமன்வலி குமாரசிங்க,**
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்



# கௌரவ சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அவர்களின் செய்தி

மக்களினை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தின் மூலம் வளமான நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கு சமூகத்தினை வலுவூட்டுவதுடன், தாழ்த்தப்பட்ட மற்றும் பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் நிறுவப்பட்ட இவ் அமைச்சினூடாக பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்கு முடிந்தமையினையிட்டு மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறைந்த வருமானம் பெறுபவர்கள், அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் விசேட நிவாரணம் தேவைப்படும் சமூகத்தினை பொருளாதார ரீதியாகவும் மற்றும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்காக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணியொன்றாகும். தற்போது “அஸ்வசும” நலன்புரி பயன் பிரேரணைகள் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள 1.2 மில்லியன் ஏழை மற்றும் மிகவும் ஏழ்மையான குடும்பங்களின் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளினை சரியாக இனங்கண்டு, அப்பிரச்சினைகளுக்கு மிகவும் பொருத்தமான முன்மொழிவுகளினைத் தயாரித்து சகல உதவிச் சேவைகளினையும் வழங்கும் நிறுவனங்களினை தொடர்புடுத்தி திட்டமிடப்பட்டுள்ள 03 வருடக் காலப்பகுதியினுள் அக்குடும்பங்களினை பொருளாதார ரீதியாகவும் மற்றும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவது ஒரு முக்கிய நோக்கமாகும்.

அதேபோல சௌபாக்யா உற்பத்திக் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீட்டுப் பொருளாதார உற்பத்திகளினை ஊக்குவிப்பதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதனூடாக தேசிய பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் அங்கவீனமுற்ற நபர்களினதும், முதியோர்களினதும் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரி, தனிநபர் ஆளுமை விருத்தியினூடாக பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்கு சமுதாயத்தினை உளரீதியாக வலுவூட்டுதல் எமது பிரதான நோக்கமாகும்.

தற்போது ஓய்வூதியம் பெறாத மக்களுக்கான புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்களினை ஊக்குவித்தல், சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், சமூகப் பணி, சமூக மேம்பாடு மற்றும் நலனுக்கான தேவையான கல்வியினை வழங்குதல், கிராம அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு உத்திகள் தொடர்பிலான பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வினைச் செய்தல் தொடர்பில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதும் எமது அமைச்சினூடாக இடம்பெறுகிறது.

மேற்குறிப்பிட்ட வகையில் எமது இலக்கு குழுக்களுக்கு இவ்வாறான சேவைகளினை வழங்குவது நலனுக்காக மட்டுமன்றி சிறுதொழில் முயற்சியாளர்களினை உருவாக்குவதற்கான முதலீட்டுச் செயலாகவும் அமையும் என்பதை நான் மேலும் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வாறான வகையில் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையினை பழைய நிலைக்குக் கொண்டு வருதல், தேசியப் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களினை அமுல்படுத்துவதற்கு அயராது உழைக்கும் கௌரவ ஜனாதிபதி, கௌரவ பிரதமர், அமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளினை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அனுப பஸ்குவல்,**
சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்



# மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் அவர்களின் செய்தி

2024 ஆம் ஆண்டின் பாராளுமன்ற பாதீட்டு விவாதத்திற்காக முன்வைக்கப்படும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் 2023 ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் செயற்திறனுக்கான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் செய்தியொன்றினை வழங்குவதற்கு முடிந்தமை எனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகவே கருதுகின்றேன். பிற ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது பல சவால்களுக்கும் மத்தியில் தொடங்கிய இந்த 2023 ஆம் ஆண்டில் குழந்தைகள், பெண்கள், அங்கவீனமுற்ற நபர்கள், முதியோர்கள் மற்றும் ஏழை சமூகம் தொடர்பில் பல சாதகமான தீர்மானங்களினை எடுப்பதற்கு முடியுமாகவிருந்தது. அதில், அரசின் கொள்கை கட்டமைப்பிற்கிணங்க, பொருளாதார ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்தி மக்களின் வாழ்க்கையினை பழைய நிலைக்கு மீட்டெடுப்பதற்கு மிகவும் பொருத்தமான மற்றும் பயனுள்ள பணிகளினைத் தொடங்குவதற்கு தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு அமைச்சுக்கு இயலுமை கிட்டியுள்ளது.

இவ் அமைச்சுக்கு, இவ் அமைச்சின் கீழ்வரும் 14 நிறுவனங்களினையும் ஒன்றிணைத்து பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினையும் அமுலாக்குவதற்கு இயலுமை கிடைத்துள்ளது. குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு, பராமரிப்பு தொடர்பான பல முக்கியமான சட்டக் கொள்கைகள், செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாட்டு முறைகளினை அறிமுகப்படுத்துவதற்கு இவ்வாண்டில் வாய்ப்புக் கிட்டியுள்ளது. மேலும், குறைந்த வருமானம் பெறும் ஓரங்கட்டப்பட்ட சமூகத்தினருக்கான வாழ்வாதார மேம்பாட்டுச் செயற்திட்டங்கள், சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிதிக் கடன் செயற்திட்டங்கள் மற்றும் பங்களிப்பு ஓய்வூதிய ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பல வெற்றிகரமாக அமுலாக்குவதற்கும் அதேபோல பெண்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்படும் சேவைகளினை ஊக்குவிப்பதற்கும் அமைச்சுக்கு முடிந்துள்ளமை குறிப்பாகப் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

அரசின் ஒதுக்கீடுகளினை சிறப்பாகக் கையாள்வதன் மூலம் அரச செலவுகளினை முகாமை செய்து அரச சார்பற்ற மற்றும் சர்வதேச பங்குதாரர் நிறுவனங்களின் பங்களிப்புடன் மிகவும் முக்கியமான பல செயற்பாடுகளினை நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளது. அதில் நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளினை முறைசார்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த அணுகுமுறையில் அனைத்து வளர்ச்சிப் பலன்களும் தேசிய மட்டத்திலிருந்து அடி மட்டம் வரை செல்வதை உறுதி செய்வதற்கான பொருத்தமான உத்திகளினை வகுத்தல் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட மிகவும் பொருத்தமான செயற்பாடாகும் என்பதுடன், 2024 ஆம் ஆண்டில் அது தொடர்பில் பாரிய பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன.

தேசிய, மாவட்ட மற்றும் பிராந்திய மட்டங்களில் சிதறியுள்ள அமைச்சின் பாரிய மனத வளங்களான பாரிய மனித வளங்களினைக் கொண்டு பல்வேறு திசைகளிலும் மற்றும் பரிமாணங்களிலும் நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைப்பதனூடாக தரமான திறன் மேம்பாட்டினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முடிந்துள்ளமை விசேடமாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

இறுதியாக, அமைச்சின் சகல பிரிவுகளின் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் உட்பட பணியாட்தொகுதி மாவட்ட மற்றும் பிராந்திய மட்டத்தில் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் 2023 ஆம் ஆண்டின் எதிர்பார்த்த இலக்குகளினை எட்டுவதற்கு வழங்கிய குறிப்பிடத்தக்க பங்களிப்பினை பாராட்டுவதுடன், 2024 ஆம் ஆண்டிலும் இதேபோன்ற ஆதரவினை வழங்குவார்கள் என்பதை நம்புகின்றேன்.

**யமுனா பெரேரா,**
செயலாளர்

# பொருளடக்கம்


| தொ. இல. | விவரம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| **01** | **அமைச்சின் தொலைநோக்கு, பணிக்கூற்று** | **1** |
| **02** | **அறிமுகம்,செயற்பாடுகள் மற்றும் பணிகள்** | **2 - 3** |
| **03** | **ஆளணி முகாமைத்துவம்** | **4** |
| **04** | **அமைச்சின் ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு** | **5** |
| **05** | **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கான சட்ட ஏற்பாடுகளினை வலுவூட்டுதல் தொடர்பிலான பொழிப்பு** | **6** |
| **06** | **அமைச்சின் நோக்கங்களினை நிறைவேற்றுவதற்கு நிறுவனங்கள் செயலாக்கப்பட்டுள்ள முறை** | |
| 6.1 | அபிவிருத்திப் பிரிவு (மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு) | **7 - 9** |
| 6.2 | திட்டமிடல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு (மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு) | **10 - 12** |
| 6.3 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகம் | 13 - 15 |
| 6.4 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திச் செயற்திட்டம் | 16 |
| 6.5 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் | 17 - 21 |
| 6.6 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | 22 - 25 |
| 6.7 | இலங்கை மகளிர் பணியகம் | 26 - 29 |
| 6.8 | தேசிய பெண்கள் கமிட்டி | 30 - 31 |
| 6.9 | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD) | 32 - 34 |
| 6.10 | சமூக சேவைகள் திணைக்களம் (DSS) | 35 - 37 |
| 6.11 | சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB) | 38 - 39 |
| 6.12 | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD) | 40 - 41 |
| 6.13 | முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE) | 42 - 44 |
| 6.14 | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB) | 45 - 46 |
| 6.15 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD) | 47 - 48 |
| 6.16 | கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI) | 49 - 50 |
| 6.17 | உளவளத்துணைப் பிரிவு | 51 - 52 |
| 6.18 | ஏனைய செயற்பாட்டுப்பிரிவு | 53 - 54 |
| 6.19 | அமுலாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் | 55 |

# 01 - அமைச்சின் தொலைநோக்கு, பணிக்கூற்று

## தொலைநோக்கு

**அபிவிருத்தியின் முழுமையான பலன்களினை நியாயமாகவும் மற்றும் சமமாகவும் அனுபவிக்கும் வளமான சமுதாயம்.**

## பணிக்கூற்று

**தேசிய முன்னுரிமைகள், தேவைப்பாடுகள் அதேபோல சர்வதேச தரங்களினைக் கவனத்திற்கொண்டு,பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல், மகளிர், சிறுவர்கள், பாதிக்கப்படக்கூடிய மற்றும் சலுகைகள் கிடைக்காத நபர்களின் சமூகப் பாதுகாப்புக்குத் தேவையான சட்டம்சார், நிறுவனம்சார் மற்றும் மனிதவள சேவைகளினை வழங்குதல், மேம்படுத்துவதற்கான திட்டங்களினைத் தொகுத்தல் மற்றும் செயலாக்குதல்.**

# 02 - அறிமுகம், செயற்பாடுகள் மற்றும் பணிகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2289/43 என்ற இலக்க மற்றும் 2022.07.22 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அவறிவித்தலினூடாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு நிறுவப்பட்டுள்ளது. இவ் அமைச்சு, சமூக வலுவூட்டல் பிரிவு மற்றும் மகளிர். சிறுவர் அலுவல்கள் பிரிவு என இரு பிரிவுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன

அமைச்சின் பிரதான செயற்பாடுகள் மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

- அரசினூடாக செயலாக்கப்படும் தேசியக் கொள்கையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் விடயம், அமைச்சுக்கு இணைக்கப்பட்ட திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை வகுத்தல், அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சு விடயப் பரப்புக்கு உரித்தான பொதுமக்கள் சேவைகளினை வினைத்திறனாகவும் மற்றும் நட்புடனும் வழங்குதல்.
- விரயம் மற்றும் ஊழலினைத் துரத்துவதனூடாக அமைச்சின் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும் முறைமைக்கு அமைவாக புதிய முகாமைத்துவத் திட்டங்கள் தொழில்நுட்பத்தினைப் புகுத்தி சகல திட்டங்கள் மற்றும் ஒழுங்குகளினை மறுசீரமைத்தல்.
- பெண்கள் பட்டயத்தினைச் செயலாக்குதல்
- அரச செயற்பாடுகளில் தீர்மானமெடுத்தல், அரசியல் துறையினூடாக பெண்களின் பங்களிப்பு மற்றும் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்கு மூலோபாயங்களினைத் தயாரித்தல் மற்றம் அமுலாக்குதல்.
- மோதல்கள் மற்றும் வறுமையினால் பீடிக்கப்பட்ட பெண்களினை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளினை எடுத்தல்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளினைத் தடுப்பதற்கான சட்டங்கள், கொள்கைகளினை வலுப்படுத்துதல் மற்றும் அமுலாக்குதல்.
- பாலினம் மற்றும் ஆண் பெண் பாகுபாடு அடிப்படையில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளினைத் தடுப்பதற்கு தற்போதுள்ள சட்டங்களினைத் திருத்தி புதிய சட்டங்கள், கொள்கைகளினை உருவாக்குதல் மற்றும் அமுலாக்குதல்.
- பெண்களினைத் தலைமையாகக் கொண்ட குடும்ப அலகுகளினை வலுவூட்டுவதற்கு கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை வடிவமைத்தல் மற்றும் அமுலாக்குதல்.
- பெண்கள் மற்றும் சிறுவர் செயற்பாடுகளுக்கான பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை நிறைவேற்றுதல்.
- முன்பள்ளிகளுக்கான தேசியக் கொள்கையொன்றினைத் தயாரித்து அமுலாக்குதல்.
- உடல் ரீதியாகவும் மற்றும் உள ரீதியாகவும் ஆரோக்கியமான குழந்தைகளினை உருவாக்கும் நோக்குடன் முன்பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை வடிவமைத்தல்.
- பாதுகாப்பற்ற நிலையிலுள்ள குழந்தைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்காக சர்வதேச தரத்திற்கு ஏற்ப நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்குதல்.
- சிறுவர் பட்டயத்தினை அமுலாக்குதல்.
- சிறுவர் பகல்நேர நிலையங்களினைக் கண்காணித்தல்.
- செவன சரண வளர்ப்பு பெற்றோர் பிரேரணைத் திட்டத்தினை அமுலாக்குதல்.
- அதிஉன்னதமான திறமைகளினைக் கொண்ட பிள்ளைகளின் அத்திறன்களினை மேம்படுத்துவதற்கு நிதிசார் உதவிகளினை வழங்குதல்.
- சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களின் தேவைகளினை அடையாளம் காணுதல் மற்றும் அத்தேவைகளினைப் பூர்த்தி செய்தல்.
- பொதுசன உதவி பிரேரணைகள் திட்டத்தினை மீளாய்வு செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் சிறந்த புதிய சீர்திருத்தங்களினை அறிமுகப்படுத்துதல்.
- காச நோயாளர்கள், சிறுநீரக நோயாளர்கள், தொழுநோயாளர்கள், புற்றுநோய் மற்றும் தலசீமியா நோயாளர்களுக்கும் மற்றும் அவர்களில் சார்ந்திருப்பவர்களுக்கும் உதவிகளினை வழங்குதல்.
- குடும்ப உளவளத்துணை சேவைகளினை அமுலாக்குதல்.

- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற மரபுகள் தொடர்பான நடவடிக்கைகள்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் பயிற்சியினை வழங்குவதற்கும் மற்றும் தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதற்கும் உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் பொதுப் போக்குவரத்தில் இணைந்து செயற்படுவதற்கு இயலுமானவாறு தேவையான கொள்கைசார் மாற்றங்களினைச் செய்தல், தேவையான வசதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை அமுலாக்குதல்.
- முதியோர்களினைப் பராமரித்தல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் முதியோர்களின் பங்களிப்பினை அதிகரித்தல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகளினை விளைத்திறன் மற்றும் வினைத்திறனான வகையில் நிறைவேற்றுவதற்கு பின்வரும் திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் செயலூக்கமான வகையில் செயற்பட்டு வருகின்றன.

I. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)
II. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)
III. நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம்
IV. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகம்
V. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி செயற்திட்டம் (உலக வங்கி நிதியம்)
VI. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
VII. இலங்கை பெண்கள் பணியகம்
VIII. தேசிய பெண்கள் கமிட்டி
IX. சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)
X. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)
XI. முதியோர்களுக்கான தேசிய செயலகம் (NSE)
XII. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)
XIII. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)
XIV. கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)
XV. உளவளத்துணைப் பிரிவு

மேலும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு தேவையான நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு தொடர்பில் உதவுவதற்கு நிர்வாகப் பிரிவு., கணக்குகள் பிரிவு, அபிவிருத்தி பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு அமுலாக்கப்படுகின்றன.

இவ் அமைச்சின் கீழ் அமுலாக்கப்படும் திணைக்களங்கள், நிறுவனங்கள், பிரிவுகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பிலும் 2023 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் தொடர்பிலும் 2023.09.30 ஆந் திகதி வரை பெறப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் தொடர்பிலான தகவல்கள் தொடர்பிலும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# 03 - ஆளணி முகாமைத்துவம்

| நிறுவனம் | சிரேஸ்ட நிலை | | மூன்றாம் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்ப நிலை | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | சேவையிலுள்ள ஆளணி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | சேவையிலுள்ள ஆளணி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | சேவையிலுள்ள ஆளணி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | சேவையிலுள்ள ஆளணி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | சேவையிலுள்ள ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு** | | | | | | | | | | | |
| மகளிர், சிறுவர் அலுவல்கள் பிரிவு | 26 | 21 | 16 | 12 | 1019 | 956 | 70 | 51 | 1131 | 1040 | 91 |
| சமூக வலுவூட்டல் பிரிவு | 26 | 18 | 3 | 4 | 438 | 511 | 44 | 38 | 511 | 571 | 60 |
| **திணைக்களங்கள்/நிறுவனங்கள்/பிரிவுகள்** | | | | | | | | | | | |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் | 08 | 06 | 224 | 220 | 253 | 236 | 17 | 13 | 502 | 475 | 27 |
| சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | 108 | 81 | 1942 | 1560 | 25509 | 22279 | 516 | 440 | 28075 | 24360 | 3715 |
| சமூக சேவைகள் திணைக்களம் | 9 | 8 | 492 | 246 | 857 | 636 | 161 | 106 | 1519 | 996 | 523 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | 18 | 14 | 17 | 08 | 570 | 297 | 13 | 07 | 618 | 326 | 292 |
| அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் | 06 | 05 | 03 | 03 | 25 | 42 | 06 | 02 | 40 | 52 | 12 |
| முதியோர்களுக்கான தேசிய செயலகம் | 7 | 3 | 1 | 1 | 115 | 106 | 20 | 15 | 143 | 125 | 18 |
| இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | 08 | 07 | 14 | 12 | 133 | 97 | 43 | 41 | 198 | 157 | 41 |
| தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் | 53 | 34 | 09 | 03 | 49 | 40 | 26 | 22 | 137 | 99 | 38 |
| முன்பிள்ளைப் பருவ விருத்தி தொடர்பிலான தேசிய செயலகம். | 05 | 02 | - | - | 391 | 388 | 05 | 03 | 401 | 393 | 08 |
| சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் | 14 | 08 | 04 | 0 | 74 | 34 | 10 | - | 102 | 42 | 60 |
| கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் | 05 | 03 | 13 | 11 | 17 | 23 | 11 | 10 | 46 | 46 | - |
| உளவளத்துணைப் பிரிவு | 1 | 1 | - | - | 334 | 329 | 1 | 1 | 336 | 331 | 5 |
| **மொத்தம்** | **294** | **211** | **2738** | **2080** | **29784** | **25974** | **943** | **749** | **33759** | **29013** | **4890** |

# 04 - அமைச்சின் ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு

இவ் அமைச்சு தொடர்பில் செலவு தலைப்பு 171 இன் கீழும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தொடர்பில் செலவு தலைப்பு 331 இன் கீழும், சமூக சேவைகள் திணைக்களம் தொடர்பில் செலவு தலைப்பு 216 இன் கீழும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் தொடர்பில் செலவு தலைப்பு 217 இன் கீழும் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| செலவு வகை | 2023 ஆம் அண்டுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் (ரூ,மி.) | 2023.01.01தொடக்கம் 2023.09.30 வரை நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - செலவு தலைப்பு 171** | | |
| மூலதனம் | 3,041.32 | 910.44 |
| மீண்டுவரும் | 42,917.12 | 25,024.04 |
| **உப மொத்தம்** | **45,958.45** | **25,934.48** |
| **சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - செலவு தலைப்பு 331** | | |
| மூலதனம் | 166.00 | 13.29 |
| மீண்டுவரும் | 126,543.00 | 106,721.31 |
| **உப மொத்தம்** | **126,709.00** | **106,734.60** |
| **சமூக சேவைகள் திணைக்களம் - 216** | | |
| மூலதனம் | 36.00 | 8.15 |
| மீண்டுவரும் | 888.00 | 608.90 |
| **உப மொத்தம்** | **924.00** | **617.05** |
| **நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் - 217** | | |
| மூலதனம் | 65.00 | 37.15 |
| மீண்டுவரும் | 384.00 | 281.50 |
| **உப மொத்தம்** | **449.00** | **318.65** |
| **முழுமொத்தம்** | **174,040.45** | **133,604.78** |

# 05 - மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கான சட்ட ஏற்பாடுகளினை வலுவூட்டுதல் தொடர்பிலான பொழிப்பு

பெண்கள், குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் உள்ள பயனாளிகளின் உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பாதுகாப்பதற்காக, அமைச்சகம் கட்டளைகள், கொள்கைகள் மற்றும் பல்வேறு திட்டங்களைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது.

- **ஆண் -பெண் சமத்துவச் சட்டத்தை அறிமுகம் செய்தலுக்கான நடவடிக்கைகள்**

  சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பிற்பாடு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அவதானித்தல்களை உள்ளடக்கி சட்ட வரைஞர் திணைக்களத்தினால் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **பெண்களை வலுவூட்டும் சட்டத்தை அறிமுகம் செய்தலுக்கான நடவடிக்கை**
  **பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்கின்ற சட்டமூலம் மற்றும் பெண்களை வலுவூட்டும் சட்ட வரைவினை சட்ட வரைஞர் திணைக்களத்தினால் அவதானம் வழங்கப்பட்டுள்ளது.**

  பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுச் சட்டம் மற்றும் பெண்களை வலுவூட்டும் சட்டத்தை ஒரு சட்டமாக இணைத்தல் பொருந்தும் என்று அந்த சட்டமூலத்திற்கு கௌரவ சட்டமா அதிபரின் அவதானம் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுச் சட்டம் மற்றும் பெண்களை வலுவூட்டும் சட்டத்தை ஒரு சட்டமாக இணைப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் மேற்படி இரு சட்டங்களையும் ஒன்றிணைத்து ஒரே சட்டமாகத் தயாரிக்கின்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

- **சிறுவர் உரிமைகள் தொடர்பான மசோதா அறிமுகம் செய்தல்**

  இலங்கையில் சிறுவர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்காக, சிறுவர் உரிமைகளைப் பாதுபாப்பது தொடர்பான அனைத்து சட்டங்கள் மற்றும் கட்டளைகளை ஆய்வ செய்து, தற்போதைய தேவைகளுக்கு ஏற்றாறு சிறுவர் உரிமைகளை ஒரு சட்டமாக சட்டமாக்குவதே இதன் நோக்கமாகும். தற்பொழுது அதுசம்பந்தமாக ஆய்வு செய்து எண்ணக்கரு பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- **அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவு**

  1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்ட வரைவொன்றினைத் தயாரிப்பதற்கு 2023.03.13 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அவ் அங்கீகாரத்திற்கு இணங்க சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள வரைவு நீதி அமைச்சினூடாக 2023.06.26 ஆந் திகதி அமைச்சுக்கு கிடைத்துள்ளதுடன், எமது அமைச்சின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் 2023.09.01 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **சைகை மொழிச் சட்டவரைவு**

  சைகை மொழிச் சட்ட வரைவு சட்டவரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதுடன், அது தொடர்பிலான ஒப்புதல் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- **அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளை வர்த்தமானி**

  அரசின் கட்டிடங்கள், பொதுவிடங்கள் மற்றும் சேவைகளினை வழங்கும் இடங்கள் அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடியவாறு அமைப்பதற்காக 2006.10.17 ஆந் திகதி 1467.15 என்ற இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் அதனைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள 1619/24, 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி தற்போதைய நிலைமைகளின் பிரகாரம் மீளவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறை தொடர்பான நிபுணர்களினைக் கொண்ட குழுவின் மூலம் சர்வதேச தரம் மற்றும் விவரக்குறிப்புக்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வர்த்தமானி வரையப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வர்த்தமானி சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பொறுப்பான தரப்பினரால் ஆய்வு செய்யப்பட்டு அது தொடர்பில் அவதானிப்புகளினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

# 06 - அமைச்சின் நோக்கங்களினை நிறைவேற்றுவதற்கு நிறுவனங்கள் செயலாக்கப்பட்டுள்ள முறை

## 6.1 அபிவிருத்திப் பிரிவு (மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு)

கொள்கை வகுத்தல் மற்றும் தேசிய மட்டத்திர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதன் பிரதான கடமைப்பொறுப்பு வகிக்கின்ற அபிவிருத்தி பிரிவின் பிரதான கடமைப்பணி அமைச்சின் ஏனைய நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல், தேசிய மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

### பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 2023.09.30 வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

**1. பெண்களுக்கு உரிய கொள்கைத்திட்டங்கள் மற்றும் சட்டங்களை தயாரித்தல்**

- **பால்நிலை மற்றும் ஆண்-பெண் பால்நிலை சமத்துவம், வன்முறை ஒழிப்பதற்கான இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரித்தல்.**

பிரதான துறைசார் திட்டங்கள் 13 இனையும் உள்ளடக்கிய ஆண்-பெண் பால்நிலை சமத்துவம் மற்றும் வன்முறை ஒழிப்பதற்காக இரண்டாவது ஐந்தாண்டு தேசிய செயற்றிட்டம், அதற்குரிய அமைச்சுகள் மற்றும் தரப்பினர்களுடன் கலந்துரையாடி, பல சந்தர்ப்பங்களின்போது மேற்கொள்ளப்பட்ட செயலமர்வுகள் ஊடாக நகல் திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. அதற்கு உள்வருகின்ற பிரதான பிரிவுகளாக சிறுவர் பிரிவு, ஆண்-பெண் பால்நிலை சமத்துவம் மற்றும் வலுப்படுத்தல், சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி, கல்விப் பிரிவு (உப பகுதி: உயர் கல்வி, பொதுவான கல்வி, திறன்கள் மற்றும் தொழிற்கல்வி), வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் வேலைவாய்ப்பு, சுகாதாரம் (உப பகுதி: உள்நாட்டு மற்றும் சுகாதாரம்), நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு, ஊடகம், இளைஞர்கள் பற்றிய பகுதி (உப பகுதி: இளைஞர் மற்றும் விளையாட்டு), போக்குவரத்து, அனர்த்தம், பொருளாதார வலுவூட்டல் போன்றவையாகும். இந்த தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்த பிற்பாடு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

- **ஆண்-பெண் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் மீதான தேசிய கொள்கைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல்.**

பெண்கள் பற்றிய தேசிய கொள்கைத்திட்டத்தை, ஆண்-பெண் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான தேசிய கொள்கைத்திட்டமாக உயர்நிலையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கைத்திட்டம் 2023 மார்ச் மாதம் 08 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தில் மும்மொழிகளிலும் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்த கொள்கைத்திட்டத்தின் அடிப்படையில் தற்பொழுது நகல் உபாய செயற்றிட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- **பெண், அமைதி மற்றும் பாதுகாப்பு மீதான தேசிய செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்**

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் **(UNSCR)** 1325 முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக, அமைதி மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான தேசிய செயற்றிட்டம் (2023-2027) தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் இலங்கையின் முரண்பாடுகளின் மூலம் பாதிக்கப்பட்ட மற்றும் முரண்பாட்டுக்குப் பிற்பட்ட பின்புலத்தில் இருக்கின்ற பெண்களின் அமைதி மற்றும் பாதுகாப்பு, பெண்களின் வாழ்வாதாரத்தை மேலுயர்த்துதல், ஆண்-பெண் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் விசேட கவனம்

செலுத்தப்படும். அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற இந்த செயற்றிட்டம் 2023 மார்ச் மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

### 2. மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி கமிட்டிக் கூட்டங்களை நடாத்துதல்

பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் சேவைகளை வழங்குகின்ற சகல தரப்பினர்களைய்ு ஒன்றுதிரட்டி, பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்காக கமிட்டி கூட்டங்களை காலாண்டு அடிப்படையில் ஒன்றுகூட்டுவதற்கு 25 மாவட்டங்களுக்கும் தேவையான நிதியை விடுவிக்கப்படும். அந்தக் கமிட்டியின் அறிக்கைகளைப் பெற்று அவற்றில் தேசிய மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டிய தலையீடுகள் இருப்பின் அவற்றுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பின்னூட்டல்களை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். இதுவரை காலாண்டுகளுக்கான 43 கூட்டங்கள் நடைபெற்றன. அதற்கான செலவு ரூ.மி 0.413

### 3. ஏனைய அமைச்சுக்களின் அறிக்கைகள் / தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவற்றுக்குரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

வெளிநாட்டமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகளின் பிரகாரம் சர்வதேச அறிக்கைகளுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல். உதாரணமாக, பெண்களுக்கெதிரான சகலவிதமான பாரபட்சங்களையும் ஒழிக்கும் சமவாயத்தின் (CEDAW) தற்போதைய நிலைவரங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (ICCPR), உலகளாவிய தொடர் மீளாய்வறிக்கை (UPR) போன்றவற்றுக்கு நிரல் அமைச்சு என்றவகையில் தகவல்களை வழங்குதல்.

### 4. ஆண் பெண் பால்நிலை மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றிய நிகழ்ச்சித்திட்டம் - ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் (UNFPA) நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்.

ஆண் பெண் பால்நிலை சமத்துவம், வன்முறை ஒழித்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினால் 2023 ஆம் ஆண்டுக்காக ரூ.மி.5.363 தொகை இந்த அமைச்சுக்கு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது. அந்த நிதியொதுக்கீட்டில் அபிவிருத்தி பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.மி.2.55 தொகையைப் பாவித்து கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டது.

- வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களின் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் அவசரத் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக ரூ.5000.00 அடிப்படையில் ரூ.மி.1.780 நிதியொதுக்கீடு, 332 பிரதேச செயலகங்களுக்கும் 24 மாவட்ட செயலகங்களுக்கும் அவசர நிலைமையை முகாமை செய்வதற்காக செலவின ஈடுசெய்வதற்காக வழங்கப்பட்டுள்ளது.
- ஆண் பெண் பால்நிலை சமத்துவம், வன்முறை ஒழித்தல் (SGBV) மற்றும் சம்பந்தப்பட்ட அறிவிக்கப்பட்ட மற்றும் அறிவிக்கப்படாத நிகழ்வுகளைப் பெற்றுக்கொள்வதற்காக பாதுகாப்பான குழுவொன்றைப் பயிற்றுவித்தல் மற்றும் மாவட்டத்தில் சேவை வழங்குபவர்களுடன் மிகச் சிறந்த ஒருங்கிணைப்புக்கான பொறிமுறையொன்றை தயாரிக்கும் நோக்கில் பரீட்சார்த்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் கேகாலை மாவட்டங்களில் நடாத்தப்பட்டது. இதற்கான செலவு ரூ.மி 0.290. கண்டி மாவட்டத்திற்கான நிகழ்ச்சிதிட்டம் ஒக்டோம்பர் மாதம் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**5. ஆசிய அபிவிருத்தி நிதி - உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி மீட்பித்தலுக்கான அவசர உதவித்திட்டத்தின்கீழ் (ADB) சட்ட உதவி மற்றும் ஆண் பெண் பால்நிலை சம்பந்தமாக விழிப்பூட்டுதல் மற்றும் வீட்டு வன்முறைகைளத் தடுத்தல் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்கள்.**

கிராமிய மட்டத்தில் பாரியளவு அறிவிக்கப்படுகின்ற வீட்டு வன்முறைகள் உள்ளிட்ட சகல விதமான வன்முறைகள், வல்லுறவுகள் மற்றும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காக மற்றும் ஆண்பெண் பால்நிலை சமத்துவத்தை உறுதிசெய்வதற்காக விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படும். 1938 பெண்கள் அவசர உதவி தொலைபேசிச் சேவைக்கு அதிகமாக கிடைக்கின்ற முறைப்பாடுகளை மாவட்டங்களைத் தெரிவுசெய்து அந்த மாவட்டங்களில் தெரிவுசெய்த 10 பிரதேச செயலகங்களின் இனங்கண்ட 1500 பயனாளிகளுக்கு நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மஹர, அம்பிலிபிட்டிய, ஹம்பாந்தோட்டை மற்றும் பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**6. மனித ஆட்கடத்தல்களை ஒழித்தல் மற்றும் கண்காணித்தல் பற்றிய தேசிய உபாயத்திட்டத்தில் அமைச்சுக்கு உரிய செயற்பாடுகளை அமுல்படுத்துதல்.**

தற்பொழுது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மனித ஆட்கடத்தல் வியாபாரத்திற்கு ஆளாகும் மிக ஆபத்துக்கு ஆளாகியிருப்பது பெண்களும் பிள்ளைகளும் ஆகும். அவர்கள் மனித ஆட்கடத்தலுக்கு உட்படுவதைத் தடுத்து பாதுகாப்பதை நோக்கமாகக்கொண்டு ''மனித ஆட்கடத்தல் (Human Trafficking)'' சம்பந்தமான சட்டரீதியான விடயங்களைப் பற்றி நாடளாவிய ரீதியில் பரந்துபட்டிருக்கின்ற கள உத்தியோகத்தர்கள், உட்பட 1929 மற்றும் 1938 தொலைபேசி சேவைகளின் உத்தியோகத்தர்கள் ஊடாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

## 7. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்

- **ஊடக பிரச்சாரம்**

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக சர்வதேச ரீதியில் ஒதுக்கப்பட்டுள்ள தினங்களில் அதுசம்பந்தமாக சமூகத்தை விழிப்பூட்டுவதற்காக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் செய்திகள், நேர்முக கலந்துரையாடல்கள் மற்றும் செய்தி மஞ்சரிகள் போன்றவற்றின் ஊடாக பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெண்களை வலுவூட்டுதல் மற்றும் அவர்களைப் பாதுகாப்பதற்காக அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்றிட்டங்கள், நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் பொருத்தமான முறையில் மனிதநேயத்துடன்கூடிய ஊடக செயற்பாடுகளைக் கையாள்வதற்காக அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றியும் சமூகத்தை உணர்வுபெறச் செய்வதற்காக ஊடகங்களின் பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்ளப்படும்.

## 6.2 திட்டமிடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு (மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள்)

### பிரதான கடமைப்பொறுப்புக்கள்

சிறுவர் மற்றும் மகளிர் துறையில் அமைச்சின் சேவைகளை மிகவும் வினைத்திறன்மிக்கதாகவும் விளைதிறன்வாய்ந்ததாகவும் மேற்கொள்வதற்காக திட்டமிடுதல், கண்காணித்தல், பின்னூட்டல்களை மேற்கொள்ளல் மற்றும் அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாவனையை முறைப்படி பேணிவரல் மற்றும் பலமாக அரச கொள்கைத்திட்டம் மற்றும் உரிய சகல தொழிநுட்ப கொள்கைகளுக்கும் ஏற்ப அமைச்சின் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை பேணிவரல்.

### பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 2023.09.30 வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

**1. திட்டமிடல்**

அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், பிரதான செயலாற்றல் மதிப்பீட்டுத் திட்டம், நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகளின் திட்டமிடல்கள் உள்ளிட்ட மகளிர் மற்றும் சிறுவர் விடயத்திற்குரிய திட்டங்களைத் தயாரித்துள்ளது. அதற்கு மேலதிகமாக, தேசிய மற்றும் சர்வதேச கொள்கைத்திட்டங்கள் மற்றும் சான்றுப்படுத்தல்களுக்கு ஏற்ப இந்த அமைச்சின் விடயப்பரப்பின்கீழ் பல்வேறு நிறுவனங்கள் / திணைக்களங்கள் மூலம் தயாரிக்கப்படுகின்ற திட்டங்கள் மற்றும் கொள்கைகளை ஏனைய சமகால அறிக்கைகளுக்காக தொழில்நுட்ப மற்றும் வளவாளர் பங்களிப்புகளைப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

**2. நெறிப்படுத்தல்**

அமைச்சின் எல்லா நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் உரிய மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்துதல். அதன்கீழ் 08 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**3. பின்னூட்டல்**

காலி, கண்டி, மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் தெரிவுசெய்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைச்சின் நிதியொதுக்கீட்டில் அமுல்படுத்தப்பட்ட முயற்சியாண்மை / வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டங்களை கண்காணித்தல் அந்த செயற்றிட்டங்களின் வெற்றி மற்றும் நிலைபேன்தகு நிலைமையை மேலுயர்த்துவதற்குத் தேவையான சான்றுப்படுத்தல்களை உள்ளடக்கிய அறிக்கையை அமுல்படுத்துகின்ற நிறுவனங்களுக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் மேலும் துறைகளைக் கண்காணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4. "லங்கா விமென் - இ மார்கட்" (Lanka women e-Market Digital Platform) டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தளம்**

முயற்சியான்மையுடைய பெண்களின் வாழ்வாதார நிலைமையை மேலுயர்த்துதல் மற்றும் அவர்களை பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தளம் ஊடாக முயற்சியான்மையுடைய பெண்களின் சந்தை வாய்ப்புகளை விரிவாக்குவதற்காக அவர்களின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் விரிவாக்குவதற்கும் பிரச்சாரம் செய்வதற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தளத்திற்குள் (https://lankawomenemarket.gov.lk) என்னும் இணைப்பு ஊடாக நுழையலாம். தற்பொழுது 316 பெண்கள் வலையமைப்பில் பதிவு செய்துள்ளனர். வலையமைப்பில் பெண்களை உட்படுத்துதல் சம்பந்தமாக கள

உத்தியோகத்தர்களுக்கு 03 பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. அதுசம்பந்தமாக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 216 பேர்களைப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக "லங்கா விமன்" - இ-மார்கடிங் சந்தைப்படுத்தல் தளத்தில் பதிவு செய்துள்ள முயற்சியான்மை பெண்கள் 52 பேர்களை உள்ளடக்கிய தகவல்களை உள்ளடக்கி லங்கா விமன் இ-டிரெக்டரி தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் முயற்சியாளர்களான பெண்களின் விபரங்கள் மற்றும் அவர்களின் உற்பத்திகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்காக அமைச்சின் யூ டியூப் வலையமைப்பு (https://youtu.be/gaWNBVryOsk) மற்றும் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாக நுழையலாம்.

## 5. "சுஹுருகத" சஞ்சிகை

பெண்களின் தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆற்றல்களை விருத்திசெய்து அவர்களை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பலப்படுத்தும் நோக்கில் 'சுஹுருகத' என்னும் சஞ்சிகை சிங்கள மொழிமூலத்தில் வெளியிடப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான சுஹுருகத சஞ்சிகையின் இ இதழ் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## 6. உத்தியோகபூர்வ இணையத்தளம், யூ டியூப் வலையமைப்பு மற்றும் முகநூல் பக்கம் இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவரல்.

அமைச்சின் சமகால தகவல்களை உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்திற்கு அறிவிப்பதற்காக தொடர்ச்சியாக இற்றைப்படுத்தி பேணிவரப்படுகின்றது. இணையத்தளம் புதிய வடிவத்தில் புத்தாக்கம் செய்யப்பட்டு பேணிவருவதற்கு உரிய நடவடிக்கைகளை தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 7. பிள்ளைகளின் போசாக்கை மேலுயர்த்துதல், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் முல்லைத்தீவு, கோகலை, கிளிநொச்சி, புத்தளம், அனுராதபுரம், மொனராகலை, வவுனியா, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 05 மாதம் தொடக்கம் 02 வயதுகள் வரையான பிள்ளைகளின் போஷாக்கு மட்டம் உயர்வடையச் செய்வதற்கான நிகழ்ச்சிதிட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமைச்சினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டது.
அங்கு ஒருமாதத்திற்கு ரூ.6,750/= வீதம் 04 மாதங்களுக்கு அந்த பிள்ளைகளின் தாய்மார் / பராமரிப்பாளருக்கு 110,687 பேருக்கு UNICEF நிறுவனத்தின் மூலம் நேரடியாக உரிய பிரதேச செயலகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. விழிப்பூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்

- **செயற்கை அறிவு பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள்**

சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத் தொடர்களுக்கு இணையாக மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்காகவேண்டி செயற்கை அறிவு பாவனை பற்றி எல்லா மாவட்ட உத்தியோகத்தர்களையும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை சூம் (Zoom) தொழில்நுட்பத்தின் ஊடாக இலங்கை கணனி அவசர அழைப்பு பிரிவின் வளவாளர் பங்களிப்புடன் நடாத்தப்பட்டதுடன், 188 உத்தியோகத்தர்கள் வினைத்திறனுடன் பங்குபற்றினர். இரண்டாவது நிகழ்ச்சி அக்டோபர் மாதம் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- **பொதுவான தகவல் தொழில்நுட்ப பயிற்சி**

தகவல் தொழில்நுட்ப அறிவு விருத்திசெய்தல் மற்றும் கணனி அறிவை மேம்படுத்துவதற்காக 16 பயிற்சி நிகழ்ச்சிகள் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு பௌதீக மற்றும் நிகழ்நிலை ஊடாக நடாத்தப்பட்டுள்ளன. தற்பொழுது அமைச்சின் 183 உத்தியோகத்தர்கள் இந்தப் பயிற்சி நிகழ்ச்சியினூடாக பொதுவான தகவல் தொழில்நுட்ப பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

- **“சுஹுருலிய” நிகழ்ச்சித்திட்டம்**

இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவரகம் (ICTA) மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுடன் இணைந்து 2017 ஆம் ஆண்டில் ஆரம்பித்து இன்றுவரை அமுல்படுத்தப்படுகின்ற பெண்களை தகவல் தொழில்நுட்பத்துடன் வலுவூட்டுவதற்காக சமகால நிகழ்ச்சித்திட்ட தொடரின் “சுஹுருலிய” ஒரு பகுதியாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் விசேடமாக முயற்சியாளர்களாக முன்வருகின்ற பெண்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவு, இணைய பாவனை மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பாவனை பற்றி வழங்கப்படுகின்ற அறிவு நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கும் பல்வேறு வகைகளில் உதவலாம். சுஹுருலிய முதலாவது கட்டத்தின் வெற்றிகரமான நிறைவின் பிற்பாடு இரண்டாவது கட்டத்திற்கு உரிய உபாயத்திட்டங்களைத் தயாரித்தல் எமது அமைச்சின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டது.

# 6.3 முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம்

## அறிமுகம்

*முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி மீதான தேசிய கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அமுலாக்க பொறிமுறையாகச் செயல்படுதல், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறைகளில் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் சம்பந்தமான ஒருங்கிணைத்தல் மற்றும் வலையமைத்தல், ஆராய்ச்சிகள், தரவுகள் சேகரித்தல் மற்றும் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பான திட்டங்களைத் தொகுத்தல். செயற்றிட்டங்கள், முன் பிள்ளைப்பருவ பிள்ளைகளின் முழு விருந்தி தொடர்பான பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல்,*

## பிரதான கடமைப் பொறுப்புக்கள்

- முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி மீதான தேசிய கொள்கைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தும் பொறிமுறையாக செயற்படுதல்.
- அரச, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தனியார் துறையின் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வலையமைப்புச் செய்தல்.
- முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்திக்கு உரிய ஆய்வுகளை மேற்கொள்ளல், தகவல்களை ஒன்றுதிரட்டுதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்.
- முன் பிள்ளைப்பருவ பிள்ளைகளின் முழு விருத்திக்கு உரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல்.
- முன் பிள்ளைப்பருவ விருத்திக்கு உரிய மனிதவள அபிவிருத்தி

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 2023.09.30 வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

### 1. கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ரூ.45,000/- போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

குடும்பத்தின் மாதாந்த வருமானம் ரூ.50,000.00 வரை வரையறுக்கப்பட்ட தாய்மார்களுக்கு ரூ.45,000.00 பெறுமதியான உறுதிச்சீட்டுக்களை விநியோகிக்கப்படும். அதன்படி, இந்த உறுதிச்சீட்டுகளின் மூலம் கர்ப்பகாலத்தில் இறுதி 06 மாதங்கள் வரையும் மற்றும் பாலூட்டும் சமயத்தில் முதலாவது 04 மாதங்கள் வரையும் தேவையான போசாக்கு பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாகும். இதுவரை கர்ப்பிணித் தாய்மார்கள் 188,174 பேருக்கு ரூ.மி 2360.364 செலவு செய்யப்பட்டுள்ளது.

### 2. முன்பள்ளி பிள்ளைகள் / முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு காலையுணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

2022 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2023 மே மாதம் 15 ஆம் திகதி முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உலக வங்கி செயற்றிட்டத்தின் நிதியுதவியின் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தப்பட்டதுடன், 2023 மே மாதம் 15 ஆம் திகதியுடன் உலக வங்கி செயற்றிட்டம் முடிவடைந்தமை காரணமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் தற்பொழுது பொதுத் திறைசேரியின் நிதியொதுக்கீட்டில் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் முன்பள்ளி பிள்ளைகள் 86,468 பேர்க்கு கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன், அதற்கான செலவு ரூ.மி.203.591 ஆகும்.

### 3. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாாந்தக் கொடுப்பனவு வழங்கும் ''குரு அபிமாணி'' நிகழ்ச்சித்திட்டம்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கிவந்த ரூ.250.00 மாதாந்தக் கொடுப்பனவு 2022 ஜுன் மாதம் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் ரூ.2,500.00 வரை உயர்த்தப்பட்டுள்ளது. 25 மாவட்டங்களிலும் 15,726 பயனாளி ஆசிரியர்களுக்காக 2023 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூ.மி.236.946 கொடுப்பனவு செய்யப்பட்டது.

### 4. முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி மீதான ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

- **முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி மீதான தேசிய ஒருங்கிணைப்புக் கமிட்டி**

செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கின்றபோது, அமுல்படுத்துகின்றபோது மற்றும் முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி பற்றிய செயற்பாடுகளின்போது தேசிய மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை பல்துறை ஒத்துழைப்புகளை உறுதிசெய்யும் நோக்கில் சகல தரப்பினர்களும் இந்த தேசிய ஒருங்கிணைப்புக் கமிட்டியினைப் பிரதிநிதித்துவம் செய்வர். இரண்டு கமிட்டிகள் நடாத்தப்பட்டுள்ளது.

- **முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா வழங்கும் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் உப கமிட்டி**

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தில் பதிவுசெய்த ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா நிறுவனங்கள் 63 இல் உள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக மீளாய்வு செய்து குறைகளை சரிசெய்தல் மற்றும் புதிதாக பதிவு செய்ய கோருகின்ற ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா நிறுவனங்களினைப் பதிவு செய்வதற்குத் தேவையான குறிகாட்டிகளைத் தயாரித்தல் இந்த உப கமிட்டியின் பிரதான நோக்கமாகும். களநிலையில் நிபுணர்களினையுள்ளடக்கிய இந்த உப கமிட்டி கூட்டங்கள் 03 நடாத்தப்பட்டுள்ளன.

அந்த நிறுவனங்களை சோதிப்பதற்கான குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மாகாணசபை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அந்தத் தகவல்களை வழங்கிவைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5. நிதி ஒதுக்கீடு இல்லாமல் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

- **வீட்டை அடிப்படையாகக்கொண்ட முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி பற்றிய செயற்றிட்டம்**

தெரிவுசெய்த குடும்ப அலகுகளுக்குத் தேவையான தலையீடுகளின் மூலம் வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கு அதியுச்ச பயன்கள் மற்றும் விருத்திக்கு இடமளிக்கின்ற சிறுவர்நேய சூழலொன்றை உருவாக்குதல் பிள்ளையின் முழு விருத்தியின்மீது பலமான தாக்கத்தைச் செலுத்துவதால் வீட்டினுள் பிள்ளைநேய சூழலொன்றை உருவாக்குதல், பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களின் முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி பற்றிய அறிவினை மேம்படுத்துதல் மூலம் பிள்ளையின் முழுவிருத்தியை உறுதிசெய்தல், குடும்பத்தில் உணவு பாதுகாப்பினை உறுதிசெய்தல் மற்றும் சிறுவர் மந்தபோசனையைக் குறைத்தல், நலிவடைந்த மற்றும் விசேட தேவையுடைய பிள்ளைகளை ஆரம்பகாலத்தில் இனங்காணல் மற்றும் தேவையான சேவைகளுக்கு அனுப்பிவைத்தல் நோக்கமாகும். சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் குடும்ப அலகுகளை இலக்காகக்கொண்டு இந்த செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் 537 குடும்ப அலகுகளுக்குத் தேவையான விழிப்பூட்டல்கள் மற்றும் தலையிடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு தரப்படுத்தப்பட்ட ஐந்து முன்பள்ளிகளை நிறுவும் செயற்றிட்டம்**

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களை நோக்கமாகக்கொண்டு அவற்றின் பண்புத்தரம் மற்றும் பௌதீக அபிவிருத்தியை உயர்ந்த மட்டத்தில் வைத்திருப்பதற்காக முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தினால் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு தேசிய தரநியமங்கள் இற்றைப்படுத்தி 2022 ஆம் ஆண்டில் மீண்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன்பிரகாரம் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிறுவப்பட்டுள்ள ஆகக் குறைந்த தரங்களின் மட்டத்தை அடையப்பெறாத முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் 05 அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கும், சுகாதார மேம்பாடு அடையப்பெற்ற முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களாக

உருவாக்குவதற்கும் இந்த செயற்றிட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம், மாகாணசபையின் முன்பள்ளி பிரிவுகளுடன் தொடர்புகொண்டு இதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதேபோல, சகல பிரதேச செயலாளரி பிரிவுகளும் உள்ளடங்கும் வண்ணம் 922 முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்குத் தேவையான விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தலையிடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்**

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் பிரதான அலுவலகத்துடன் ஒருங்கிணைப்புச் செய்து முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தின் கடமைப்பொறுப்பினை உயர்ந்தபட்ச வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக இந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படுகின்றது. நிகழ்நிலை ஊடாக 09 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 6. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

- **முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரம்**

எல்லா வருடங்களிலும் ஜுலை மாதம் 14 தொடக்கம் 20 வரை முன் பிள்ளைப்பருவ விடயப்பரப்புடன் சம்பந்தப்பட்ட பொறுப்புவாய்ந்த சகல தரப்பினர்களையும் உள்ளடக்கி, முன் பிள்ளைப்பருவ பிள்ளைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் நடாத்தப்படும். 2023 ஆம் வருடத்தில் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பற்றிய தேசிய வாரம் அனுஷ்டித்தல் ''முன் பிள்ளைப்பருவம் மலர்வதற்காக எல்லோரும் அன்புடன் ஒன்றிணைவோம்'' என்னும் தொணிப்பொருளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அவையாவன:

- செத்சிரிபாய கட்டம் 1 மற்றும் 2 இல் உள்ள 25 பிரிவுகளில் 500 அரச உத்தியோகத்தர்களை முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பற்றி விழிப்பூட்டும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி சம்பந்தமாக கொள்கைத்திட்ட வகுப்பாளர்களுடன் முன் பிள்ளைப்பருவ தேசிய கொள்கைத்திட்ட கண்காணிப்பு செயன்முறை பற்றிய இரண்டு நாட்கள் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.
- 200 கர்ப்பிணித் தாய்மார்களை இலக்காகக்கொண்ட விழிப்பூட்டும் நிகழ்ச்சி களனி பிரதேச செயலகத்தினால் ஒழுங்குசெய்து தேசிய மட்ட நிகழ்ச்சி நடாத்தப்பட்டதுடன், அந்த நிகழ்ச்சியுடன் இணைந்ததாக மேல் மாகாணத்தில் (களுத்துறை, கம்பஹா, கொழும்பு) 40 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 40,000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு யுனிலீவர் நிறுவனத்தின் அனுசரணையில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
- முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு சம்பந்தமாக பெற்றோரை விழிப்பூட்டும் நிகழ்ச்சிகள் 225 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைபெற்றன.

## 6.4 முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி செயற்றிட்டம்

### அறிமுகம்

இலங்கையில் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தியில் உள்ள விசேடமான தேவைகள் மற்றும் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு 2016 ஆம் ஆண்டில் உலக வங்கி கடனுதவித் திட்டத்தின்கீழ் முதற்தடவையாக முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2023 ஜுன் மாதம் வரை அமுல்படுத்தப்பட்ட இந்த செயற்றிட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம் இலங்கையில் முன் பிள்ளைப்பருவ துறையின் பண்புத்தரங்களை மேம்படுத்துதல் மற்றும் சகலர்க்கும் சமமான சேவைகளை அடைந்துகொள்ளச் செய்வதுமாகும்.

### பிரதான அபிவிருத்தி நிகழ்ச்ச்சித்திட்டங்கள்

- குறைந்த பயன்களைக் கொண்ட அல்லது பயன்கள் கிடைக்காத பிரதேசங்களில் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களைத் தாபித்தல் மற்றும் புதுப்பித்தல்.
- இனங்காணப்பட்ட முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரண பொதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு வாசிப்பு பொருட்கள் அடங்கிய பொதி வழங்குதல்.
- இனங்காணப்பட்ட முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு நீர்வடிகட்டி (Water Filter), விளையாட்டு உபகரணங்கள், மரத்தளபாடங்கள் வழங்குதல்.
- இனங்காணப்பட்ட முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு குடிநீர் மற்றும் சுத்திகரிப்பு வசதிகள் வழங்குதல்.
- முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகளை அமுல்படுத்தல்.
- பொதுசன ஊடகம் மூலம் பெற்றோரை விழிப்பூட்டும் நிகழ்ச்சி நடாத்துதல்.
- முன்பள்ளி பிள்ளைகளுக்கு காலையுணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் (2023 ஜனவரி தொடக்கம் ஜுன் வரை)
- விசேட தெவையுடைய பிள்ளைகளுக்கு நிலையங்களை நிறுவுதல்.

2023 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட மேற்படி செயற்றிட்டத்தின் செயற்பாடுகளுக்காக ரூ.மி. 886.650 செலவிடப்பட்டுள்ளது.

## 6.5 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

### அறிமுகம்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் - சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அனாதைகள், கைவிடப்பட்ட, ஆரவற்ற மற்றும் முரண்பாடுகளின் மூலம் கைவிட்டுச் செல்கின்ற சகல தரப்பினர்களதும் பிள்ளைகளுக்கு சமவயதுக் குழுவிலுள்ள பிள்ளைகளுக்கு சம வாய்ப்புகளை வழங்குவதற்காக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கொள்கைகள் மற்றும் சட்டரீதியான ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற தேசிய மட்டத்திலான நிறுவனமாகும்.

### பிரதான கடமைப்பொறுப்புக்கள்

தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச தரங்களுக்கேற்ப அனாதை, கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பிள்ளைகளுக்கு சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு உள்வருகின்ற பிள்ளைகளும் விசேட காரணத்தின்பேரில் சகல பிள்ளைகளுடையதும் உரிமைகளைப் பாதுகாக்கின்றவாறு அவர்களுக்கு சம வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்கும் பணிக்கொடையின் பேரில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை அமுல்படுத்தப்படுகின்றன.

நன்னடத்தை சேவையின்கீழ் பிரதானமாக மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பணிகள் சம்பந்தமாக ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் ஒத்துழைத்தல், நன்னடத்தை சேவைகளுக்காக அதன்கீழ் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு நிறுவனங்களுக்காக தேவையான சந்தர்ப்பங்களில் வழிகாட்டுதல், தேசிய கொள்கைகள் / தரங்களைத் தயாரித்தல், மாற்று பராமரிப்பு கொள்கைத்திட்டம் அமுல்படுத்துதல், பிள்ளைகளுக்கு உரிய சட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் புதிய சட்டங்களை இயற்றும் நடவடிக்கைகளுக்கு உதவுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். சிறுவர் பராமரிப்பு சேவைகளின்கீழ் சிறுவர் சமவாயம் அமுல்படுத்துதல், சிறுவர் பராமரிப்புக்காக சமூக கட்டமைப்பொன்றை ஸ்தாபித்தல் மற்றும் பலப்படுத்துதல், சிறுவர் பராமரிப்புக்காக நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படுகின்ற அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டு சேவையாற்றுகின்ற சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் / உதவியாளர்கள் மூலமாக மேற்கொள்ளப்படும்.

### பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 2023.09.30 வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

#### 1. சிறுவர் உரிமைகள் பற்றிய செயற்குழு நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக கிராமிய, பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கிமட்டிகளின் அமைப்பில் சிறுவர் விடயத்திற்குப் பொறுப்பான இனங்கண்ட பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதன் மூலம் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கின்ற செயன்முறையில் முன்னணி வகிக்கின்ற பிரதானமான பொறிமுறையாகும்.

இந்த ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய கமிட்டி உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் கிராமிய சிறுவர் அபிவிருத்தி கமிட்டிகள் 10,070 இதுவரை ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த ஆண்டில் கிராமிய சிறுவர் அபிவிருத்தி கமிட்டிகள் 390 இனைப் பலப்படுத்தவதற்காக மற்றும் மீள்கட்டமைப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுவர் உரிமைகள் பற்றிய பிரதேச செயற்குழு கூட்டங்கள் 743 அமைக்கப்பட்டுள்ளதுடன் நிதி முன்னேற்றம் ரூ.மி.1.916 ஆகும். சிறுவர் உரிமைகள் பற்றிய மாகாண செயற்குழு கமிடடிக் கூட்டங்கள் 14

நடாத்தப்பட்டுள்ளதுடன், செலவு ரூ.மி.0.1245 ஆகும். மேலும் சிறுவர் உரிமைகள் பற்றிய செயற்குழு தேசிய கூட்டங்கள் 02 நடாத்தப்பட்டுள்ளதுடன், செலவு ரூ.மி.0.033 ஆகும். இந்த ஆண்டில் நவம்பர் மாதத்தில் இன்னுமொரு கூட்டம் நடாத்தப்படவிருக்கின்றது.

- **ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சாசனம் பற்றிய 7 வது அரசாங்க காலாண்டறிக்கை.**

ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சாசனம் பற்றி இந்த நாட்டில் அமுல்படுத்தப்படுகின்ற முன்னேற்றம் உள்ளடங்கலாக, 5 வருடங்களுக்கு ஒருமுறை ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய கமிடடியில் சமர்ப்பிக்கவேண்டிய அரசாங்க அறிக்கை இந்த ஆண்டில் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக பிள்ளைகள் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அரச மற்றும் 65 அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் 1144 பிள்ளைகளின் பங்குபற்றுதல்களுடன் தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற உளவளத்துணை 20 செயலமர்வுகள் ஊடாக தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

### 2. சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் உரிமைகள் சாசனத்தின் பிரகாரம் இலங்கை சிறுவர்களின் பங்கேற்புடன் உரிமைகளை மேலும் அர்த்தமுள்ளதாக உறுதிசெய்யும்வகையில் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சிட்டமொன்றாகும். கிராம அலுவலர் பிரிவுகள் மட்டத்தில் ஸ்தாபிக்கப்படுகின்ற சிறுவர் சபை பதவிவழி தேசிய சபை வரை நீண்டுசெல்லும். இதன்கீழ் சிறுவர் சபைகள் 9444 ஸ்தாபிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 400,000 இற்கு அண்மித்ததாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் பிரதேச சிறுவர் சபை கூட்டங்கள் 390 நடாத்தப்பட்டுள்ளதுடன், மாவட்ட சிறுவர் சபைக் கூட்டங்கள் 45 நடாத்தப்பட்டுள்ளன. இதற்காக செலவிட்ட தொகை ரூ.மி.2,459 ஆகும். மேலும் தேசிய சிறுவர் சபை கூட்டங்கள் 02 உம் நடாத்தப்பட்டுள்ளன. அதற்காக 350 பேர் பங்குபற்றியிருந்தனர்.

### 3. நலிவடைந்த பிள்ளைகளுக்காக பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரித்தல்

பிள்ளைகள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதனைத் தடுக்கும்நோக்கில் பலவிதமான தொழில்நுட்ப முறைமைகளைப் பின்பற்றி இடர்களை இனங்கண்டு, பல்தேர்வு பாதுகாப்பு வழிமுறைகளினூடாக பிள்ளைகளைத் தங்களுடைய குடும்பத்தினுள் வைத்துக்கொண்டு பாதுகாப்பினை உறுதிசெய்தல், அபிவிருத்தி செய்தல் குறிக்கோளாகும். இதுவரை திணைக்களத்திற்கு 657 சிறுவர்களுக்கு பாதுகாப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு 105 திட்டங்களை திணைக்களத்தின் நிதியொதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்றிட்டத்திற்காக 44 திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் / உதவியார்களினால் நிதியொதுக்கீடுகளின்றி தீர்வுகள் பெற்றுக்கொடுத்த திட்டங்களின் எண்ணிக்கை 150 ஆகும். இதுவரை திணைக்களத்தின் நிதியொதுக்கீட்டில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்ள்ள 37 ஆகும். செலவு ரூ.மி.1.414 ஆகும்.

### 4. சிறுவர்களை மையப்படுத்தி ஆய்வுகள்

பிள்ளைகளை ஆபத்துகளுக்கு உள்ளாக்குகின்ற நிகழ்வுகள், சந்தர்ப்பங்கள், இடங்கள், பிள்ளைகளினாலேயே இனங்காணல், அதற்குரிய செயற்றிட்ட முன்யோசனைகளை, அவர்களினாலேயே தயாரித்து அமுல்படுத்துதல் இதன்கீழ் நடைபெற்றது. இனங்கண்ட 05 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 3 நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி முன்னேற்றம் ரூ.மி.0.075 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### 5. சிறுவர் மையப்படுத்தி அனர்த்தங்கள் இடர்களைக் குறைக்கின்ற நிகழ்ச்சித்திட்டம் (CCDRR)

இயற்கை அனர்த்தங்களின் இடர்பாடுகளின்போது முன்னாயத்த செயன்முறையில் பிள்ளைகளை வினைத்திறன்மிக்க தலையீடுகளை மேற்கொள்பவர்களாக பலப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்றது. அங்கே மாவட்ட மட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற 22 செயற்றிட்டங்களை அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், சிறந்த செயற்றிட்டங்கள் 03 இனை மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த

நிகழ்ச்சித்திட்டம் யுனிசெப் உதவித் திட்டத்தின்கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். 143 பிரதேச செயலாளர பிரிவுகளில் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், செலவு ரூ.மி.1.430 ஆகும்.

**6. கல்வி உரிமைகளை உறுதிசெய்யும் நோக்கில் அமல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்**

- **கெப்பகரு தெகுரு உதவித்திட்டம்**

  அரச நிதியின்கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். இதன்கீழ் இந்த வருடத்தில் ஒரு பிள்ளைக்கு வருடத்திற்கு ரூ.12,000.00 அடிப்படையில் வழங்கப்பட்டது. இதுவரை 1847 சிறுவர்களுக்கு ரூ.மி.10.466 ஒதுக்கப்பட்டு முன்னேற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 1990 பிள்ளைகளுக்கு நன்மை கிடைக்கும்.

- **இடைவெளிவிட்டு பாடசாலை செல்லும் பிள்ளைகள் மற்றும் பாடசாலை இடைவிலகிச் செல்லும் இடர்பாடுள்ள பிள்ளைகளுக்கான உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்.**

  இதன்கீழ் 215 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கப்பட்டது. இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள செலவு ரூ.மி.0.430 ஆகும்.

**7. கல்வி உரிமையை உறுதிசெய்வதற்காக வெளிவாரி நிறுவனங்களின் அனுசரணையில் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்**

- **சிப் சவிய**

  இது அட்லஸ் நிறுவனத்தின் அனுசரணையின்கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமாகும். இதன்கீழ் தற்பொழுது ஒரு பிள்ளைக்காக மாதாந்தம் ரூ.2000.00 அடிப்படையில் அனுசரணை வழங்கிவைக்கப்படும். தற்பொழுது உள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 230 பேருக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டது. வழங்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ.மி.4.24 ஆகும்.

- **செவண சரண கெபகரு மாபிய திட்டம்.**

  கெபகரு மாபிய நிதியுதவியின்கீழ் பொருளாதார வசதியற்ற கல்வி பெறுகின்ற பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். இதன்கீழ் 10 பிள்ளைகளுக்கு ரூ.மி.0.216 அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

- **அத்வெல (கைகொடுத்தல்) நிகழ்ச்சித்திட்டம்**

  ஒரு பிள்ளைக்கு பாதுகாப்பான குடும்பமொன்றில் உயிர் வாழ்வதற்குள்ள பாதுகாப்பு, சுகாதாரம், போசாக்கு மற்றும் கல்வி போன்ற உரிமைகளை உறுதிசெய்து பிள்ளைகளின் முழு விருத்தியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். அனுசரணையாளர்கள் மற்றும் உதவி நாடுகின்ற பிள்ளைகள்/குடும்பங்கள் இடையே ஒருங்கிணைப்பொன்றை திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்கீழ் 456 பிள்ளைகள் உதவி பெற்றுவருகின்றனர்.

**8. சிறுவர் உரிமைகள் சாசனத்தின் பிரகாரம் சுகாதாரம் மற்றும் போசாக்கு உரிமையை உறுதிசெய்தல்.**

இதன்கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமாக குறை வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் பிள்ளைகள் முகங்கொடுக்கின்ற திடீர் மரணங்களின்போதான உதவி, மருத்துவ மற்றும் இரட்டைக் குழந்தைகளுக்கு மற்றும் போசாக்கு தேவையுள்ள பிள்ளைகளுக்கு உதவி பெற்றுக்கொடுத்தல் இதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்கீழ் உதவி பெற்றுக்கொடுக்கின்ற பயனாளி பிள்ளைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

- மருத்துவ மற்றும் போசாக்கு உதவி கொடுத்தல் - 25 சிறுவர்கள்
- இரட்டைக் குழந்தைகளுக்கு உதவி – 180 சிறுவர்கள்
- திடுர் மரண உதவித்தொகை – 19 சிறுவர்கள்

**9. அரச சார்பற்ற அமைப்புகள் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்.**

- **ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)**

உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி மீட்பித்தலுக்கான செயற்றிட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித்திட்டத்தின்கீழ் அமுல்படுத்தப்படுத்தப்படும். இதன்கீழ் சிறுவர் இல்லங்களின் அடிப்படைத் தேவைகளை வழங்கிவைத்தல், சிறுவர் இல்லங்களின் பணியாளர்களைப் பயிற்றுவித்தல், தேசிய, பிரதேச

மட்டத்தில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் / உதவியாளர்கள் பயிற்சி, பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்காக பாதுகாப்புத் திட்டங்களை அமுல்படுத்துதல், பராமரிப்பு இல்லங்களில் உள்ள இளைஞர்களுக்கு வாழ்வாதார அபிவிருத்திக்கு ஒத்துழைத்தல் மற்றும் அந்த நிலையங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- **ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் UNICEF நிகழ்ச்சித்திட்டம்**

.இதன்கீழ் அடிப்படையான நடவடிக்கைகள் சிறுவர்களை மையமாகக்கொண்ட ஆய்வு நடவடிக்கைகள் ஊடாக இனங்காணப்பட்ட சிறுவர்களை அடிப்படையாகக்கொண்ட இடர்களைக் குறைத்தல், நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளைகளுக்கு உதவுதல், பிள்ளைகளை நிறுவனமயப்படுத்துவதைத் தடுப்பதற்காக குடும்பங்களை மையமாகக்கொண்ட பராமரிப்புகளைப் பலப்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் கதை சொல்லல் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

## 10. விழிப்புணர்வு செய்தல் மற்றும் பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டம்

- **வான்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

சிறுவர் உரிமைகளை சமூகத்தில் உறுதிசெய்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிக்கும் நோக்கல் சிவில் சமூகத்தினை விழிப்பூட்டுவதற்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தப்படுகின்றன. இதன்கீழ் எவ்வாறான சிறுவர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள்? இவ்வாறான சிறுவர்களுக்கான 291 திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதற்கான செலவு ரூ.மி.2.193 ஆகும். மேலும் நிதியொதுக்கீடுகளின்றி இதுவரை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 2,085 மேற்கொள்ளப்பட்டுள்ளன. விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்குப் பங்குபற்றிய பயனாளி பிள்ளைகளின் எண்ணிக்கை 103,000 ஆகும்.

- **பிந்தங்கிய சமூகத்தின் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்**

சிறுவர் உரிமைகள் மீறப்படுதல் அதிகமான இடம்பெறுகின்ற இடர்பாடுள்ள பெருந்துதோட்டப்புறங்கள், மாடி வீட்டுத் தொகுதிகள், மீனவ மற்றும் ஆதிவாசிகள் போன்ற பிந்தங்கிய சமூகத்தின் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டம். இதன்கீழ் 19 நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றுக்காக ரூ.மி.0.750 அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் பிறப்பு சான்றிதழ் இல்லாத சிறுவர்களுக்காக பிறப்பு சான்றிதழ் வழங்கும் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் பெருந்தோட்டப்புற பிள்ளைகளுக்கு ஒரு நிகழ்ச்சியும், பிந்தங்கிய பிள்ளைகள் மற்றும் பெற்றோரை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் உள்ளடங்கலாக மொத்தம் 5 நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவு ரூ.மி 0.126 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- **Digital Story Telling நிகழ்ச்சித்திட்டம்**

கையடக்க தொலைபேசி மற்றும் தொடர்பாடல் உபகரணங்களைப் பாவித்து சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், உரிய செய்தியை, செயற்பாடுகளை சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் ஆற்றல்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் யுனிசெப் நிறுவனத்தின் நிதி மற்றும் தொழிநுட்ப அனுசரணையில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் சங்கங்களுக்காக அமுல்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். 19 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருப்பதுடன் 570 பிள்ளைகள் மற்றும் உத்தியோகத்தர்கள் இதன்கீழ் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி பெறுபவர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 620 ஆக்கங்களில் 12 தொகுதிகளின்கீழ் மதிப்பீடுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 11. திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற புதிய நிகழ்ச்சித்திட்டங்கள்

- **பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்ற குடும்பங்களின் சிறுவர்களுக்கான திறன்விருத்தி பயிற்சி வழங்குதல்.**

இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்றது. பொருளாார நெருக்கடியை எதிர்நோக்கும் குடும்பங்களின் சிறுவர்களை அடையாளம் காணுவதற்காக அந்த சிறுவர்களுக்கு திறன் விருத்தி பயிற்சியினை வழங்குவதனால் அவர்களின் எதிர்காலம் சிறந்தாக அமைவதற்கான வழிவகுக்கும் என்பது இதன் நோக்கமாகும். இதன்கீழ் தற்பொழுது 120 பிள்ளைகள் வரை ஹோட்டல் பாடசாலைகள் ஊடாக தொழிற்பயிற்சி வழங்குவதற்கான சகலவிதமான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதுடன், அந்தப் பயிற்சியின் இறுதியில் உரிய துறையில் தொழில்களுக்கு இணைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **மாற்று அரவணைப்பு கொள்கையை அமுல்படுத்துதல்**

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்ப சேவைகள் திணைக்களம் பல ஆண்டுகளாக பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக விசேட நிகழ்ச்சிதிட்டங்கள் பலவற்றை அமுல்படுத்திவருகின்றது. அதன் பிரகாரம் மாற்று அரவணைப்பு கொள்கைத்திட்டம் அமுல்படுத்தும்பொருட்டு கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது.

- ➢ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு சிறுவர்கள் அனுப்பிவைப்பதனை குறைத்தல்.
- ➢ மாற்று அரவணைப்பு தேசிய கொள்கைத்திட்டம் அமுல்படுத்துவதற்காக மாகாண மட்டத்தில் 9 செயற்றிட்டங்கள் தயாரித்து அமுல்படுத்துதல்.
- ➢ சட்டத்துடன் பிரச்சினைக்குள்ளான பிள்ளைகளின் புனருத்தாரணம்.
- ➢ இதன்கீழ் பால்ய வயது பிள்ளைகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் நீதிமன்ற செயன்முறையை நடாத்தி பிரயோக ரீதியான நிலைமைகள் சம்பந்தமாக நீதிபதிகளை விழிப்பூட்டும் இரண்டு நாட்கள் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. பிணை வழங்க இயலுமான குற்றங்களை மேற்கொண்ட பிணை செலுத்த முடியாமல் சிறைச்சாலைகளில் காலங்கடத்தும் பிள்ளைகளுக்கு சட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்.
- ➢ மத்திய மற்றும் தென் மாகாணங்களில் கணக்கெடுப்புகளின் மூலம் இனங்கண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் உள்ள சமூகமயமாகிய பிள்ளைகளை இனங்காணல்.
- ➢ மாற்று அரவணைப்பு கொள்கைத்திட்டம் பற்றிய வான்மை விருத்தி / விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்
- ➢ மாற்று அரவணைப்பு கொள்கைத்திட்டம் பற்றி பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல் நிகழ்ச்சியில் 47 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல், அவ்வாற பயிற்சி பெறுகின்ற உத்தியோகத்தர்களின் மூலம் 8 மாவட்டங்களில் 460 பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிமுகப்படுத்தலாம்.

# 6.6 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

### பிரதான கடமைப்பொறுப்பு

1998 இலக்கம் 50 இன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 வது சரத்தின் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு விரிவான கடமைப்பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான தேசிய கொள்கைத்திட்டத்தை வினைத்திறன்மிக்கதாக அமுல்படுத்துவதற்குத் தேவையான சட்ட, நிர்வாக அல்லது வேறு புனர்நிர்மான அபிவிருத்தி செய்தல், சிறுவர்களுக்கு எதிரான ஆபத்துகளைப் பற்றிய தேசிய தரவுகளை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்தி மற்றும் பேணிவரல், பொதுமக்களிடமிருந்து சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகளைப் பெறல், விசாரணைகள், கண்காணித்தல் மற்றும் வழிப்படுத்தல், பிள்ளைகள் சம்பந்தமான சிறுவர் துஷ்பிரயோக வழக்கு நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் சட்ட நடைமறைகளைக் கண்காணித்தல் மற்றும் சட்டத்துடன் முரண்படுகின்ற மற்றும் தொடர்புபடுகின்ற சிறுவர்களுக்கான உதவிகள், கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல்களை மேற்கொள்ளல், சிறுவர் பாதுகாப்பு சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு ஆகக் குறைந்த தரநியமங்களை விருத்தி செய்தல் மற்றும் கண்காணித்தல் அவற்றில் உள்ளடங்கும். அதேபோல பிள்ளையின் அதியுன்னத நிலைமைக்காக சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழித்தல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான பிள்ளைகளுக்கு சிகிச்சையளிக்கும் நோக்கில் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடாத்துதல். சகல விதமான துஷ்பிரயோகளிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாப்பதை உறுதிசெய்யும் வகையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிக்கும் முறைமை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அறிவை பிரபலப்படுத்துவதற்காக சிறுவர்கள், இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொதுமக்களை விழிப்பூட்டுதல், தகவல் மற்றும் கல்வியை வழங்குதல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் அபிவிருத்தி பற்றிய பங்குதாரர்களுடன் கூட்டங்களை, செயலமர்வுகளை, கலந்துரையாடல்களை மற்றும் சந்திப்புகளை மேற்கொள்வது பிரதானமான கடமைகளிடையே உள்ளன.

### பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 2023.09.30 வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

#### 1. சிறுவர் உதவி தொலைபேசி சேவை 1929

சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான பொதுமக்கள் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல் இதன் பிரதானமான நோக்கமாகும். இதன்மூலம் உடல், உளவள, பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட புறக்கணிப்புகளுக்குரிய பொதுமக்கள் முறைப்பாடுகளை 24 மணிநேரம் பொறுப்பேற்கப்படும். இன்றுவரை 1929 தொலைபேசி சேவைக்கு 87,720 அழைப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 6,342 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த முறைப்பாடுகளிடையே பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவை என்பதையிட்டு 1842 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கொடுமைகள் பற்றிய முறைப்பாடுகள் 1681 உம் கட்டாயக் கல்வி தடைப்படல் அல்லது அவற்றுக்குரிய முறைப்பாடுகள் 1389 உம் கிடைக்கப்பெற்றுள்ளன.

#### 2. பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் கமிட்டிகளை நியமிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் (சுரெகும் பவ்வ)

கட்டாயக் கல்வி பெறும் உரிமையை உறுதிசெய்தல் மற்றும் அந்தப் பிள்ளைகளை சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து தடுப்பதற்குத் தேவையான முறையான நடவடிக்கைகளையெடுத்தல் மற்றும் இந்தப் பாடசாலைகளில் பாடசாலை சிறுவர் பாதுகாப்பு கமிட்டிகளை ஸ்தாபித்தல் நோக்கமாகும். இங்கே 2011 இலக்கம் 17 இன் சுற்றறிக்கையின் பிரகாரம் கல்வி அமைச்சுடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்கின்றது. பாடசாலை பாதுகாப்பு கமிட்டிகள் 717 ஸதாபிக்கப்பட்டதுடன், ODK (Open Data Kit) அவ் நோக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 978 ஆகும்.

**3. விசேட புலனாய்வு, புலனாய்வு நெறிப்படுத்தல், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய நெறிப்படுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட சைபர் நெறிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

சிறுவர் துஷ்பிரயோகங்களின் மூலம் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் பாதுகாப்பினை வழங்குதல் இதன் பிரதான நோக்கமாகும். அதற்காக சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான விசேட புலனாய்வுகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். இன்றுவரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் விசாரணை பிரிவினால் நிதிமன்றத்திற்கு 1567 தடவை வழக்கிற்குச் சென்றுள்ளார்கள், அதேபோல சட்டப் பிரிவினால் நிதிமன்றத்திற்கு 28 தடவைகள் சென்றுள்ளார்கள், 1,119 தனிநபர்களுக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது, சைபர் கண்காணிப்புக்கான முறைப்பாடுகள் 113 கிடைக்கப்பெற்றுள்ளன.

**4. சிறுவர்நேய காண்ணொளி (வீடியோ) சாட்சியங்களை பதிவுசெய்யும் பிரிவினை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் உரிமைகள் மீறப்பட்ட சிறுவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.**

சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்களை மூன்றாம் தரப்பு பாதிப்புக்குள்ளாகாமல் இருப்பதைத் தடுத்தல் இதன் பிரதான நோக்கமாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரிவில் மற்றும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் (ராகம) லமாபியச வளாகத்தில் புதிதாக சிறுவர்நேய காண்ணொளி (வீடியோ) சாட்சியங்களை பதிவுசெய்யும் பிரிவு மூலம் சிறுவர்களின் சாட்சியங்களை காண்ணொளி (வீடியோ) மூலம் பதிவு செய்யப்படுகின்றன. வீடியோ சாட்சியங்கள் 201 நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்றம் மற்றும் நீதிபதியின் கூற்றின்படி 128 சாட்சிகள் விடுவிக்கப்பட்டது.

**5. தேசிய சிறுவர் மைய உள-சமூக உதவிச் சேவை வழங்கல்**

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் இடர்பாட்டினைக் குறைத்தல், கல்விக்கு உதவுதல், மற்றும் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் இதன் பிரதானமான நோக்கமாகும். இதன்மூலம் சிறுவர் மையப்படுத்திய உள-சமூக ஒத்துழைப்பினை சிறுவர்களுக்கு வழங்கிவைக்கப்படும். அதற்கமைவாக இதுவரை 523 சிறுவர்களுக்கு உளநலத்திற்கான பங்களிப்புகளை பெற்றுக்கொள்வதுடன் அவற்றுக்கான பின்னூட்டல்கள் 393 மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே இதற்கு மேலதிகமாக உளநல ஆலோசனைகள் 135 மற்றும் சம்பவ ஆய்வுகள் 03 அமுல்படுத்தப்பட்டது. இன்றுவரை செலவு ரூ.மி.0.112 ஆகும்.

**6. கெப்பகரு உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் சுனாமியின் பிற்பாடு அனர்த்தங்களுக்கு ஆளான சிறுவர்களுக்கு உதவி செய்தல் மற்றும் கண்காணித்தல்**

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பொறுப்புதாரிகளைப் பரீட்சித்து சிறுவர்களின் அதியுன்னத நலனை உறுதிசெய்யும் வகையில் பொறுப்புதாரிகள் மற்றும் பராமரிப்புக்காக சான்றுப்படுத்துதல் மற்றும் அனைவர்க்கும் கல்வி என்னும் நிலைபேன்தகு தொனிப்பொருளின்கீழ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட, கைவிடப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்குதல் மற்றும் அவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாத்தல் இதன் பிரதான நோக்கங்களாகும். இதன் கீழ் தற்பொழுது 17 சிறுவர்களுக்கு கல்விக்கான உதவி வழங்குவதுடன், 02 சுனாமி சபைகள் அமுல்படுத்தப்படும். இதற்காக ரூ.மி.0.442 செலவுகள் மேற்கொள்ளப்பட்டன.

**7. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைக் கண்காணித்தல் மற்றும் நெறிப்படுத்தல்**

1998 இலக்கம் 50 இன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (கெ) சரத்தின்படி பிள்ளைகளுக்கு சிறுவர் பராமரிப்பு சேவைகளை வழங்குகின்ற எல்லா சமய மற்றும் அரங்காவல் நலன்புரி நிறுவனங்கள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களினைக் கண்காணித்தல் மற்றும் நெறிப்படுத்துதல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக சிறுவர் அபிவிருத்தி

நிலையங்களில் சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 03 விழிப்புணர்வு நிகழ்சிதிட்டங்களும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை கண்காணித்தலுக்காக உத்தியோகத்தர்களுக்கான 01 விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

**8. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.**

- **பாடசாலை மாணவத் தலைவர்களுக்கு "மாணவத் தூதுவர் தேசிய நிகழ்ச்சித்திட்டம்" மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு "பல்கலைக்கழக தூதுவர்" தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

சிரேஷ்ட மாணவத் தலைவர்களின் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவு, ஆற்றல்கள், மனப்பாங்கு விருத்திசெய்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதானமான நோக்கமாகும். சிறுவர் துஷ்பிரயோகத்தைக் குறைப்பதற்காக மாணவத் தலைவர்களின் பங்கேட்பினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பாடசாலை சமூகம் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக வழிப்புணர்வு செய்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

பல்கலைக்கழகத்தினுள் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக மாணவர்கள் மற்றும் சமூகத்தவர்களை விழிப்பூட்டுவதற்காகப் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கைத்திட்டம் அமுல்படுத்துகின்றபோது பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய கொள்கைத்திட்டத்தை பிரச்சாரம் செய்தல் இந்த நிகழ்ச்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய பதிவு செய்தலுக்கான பாடசாலைகளின் எண்ணிக்கை 456 ஆகும் அவ்வாறே மாவட்ட மாணவத் தூதுவர் பயிற்சி திட்டம் 02 அமுல்படுத்தப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் 2262 பேருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்டம் 08 அமுல்படுத்தப்பட்டது. இதற்கான செலவு ரூ.மி.0.524 ஆகும்.

இவ்வாறான பிரதான நிகழ்ச்சிதிட்டத்திற்கு மேலதிகமாக ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான, அச்சுறுத்தலுக்கு ஆளாகக்கூடிய, கண்ணுக்கு தென்படாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு கல்வி உதவிகள் அல்லது உரிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் அல்லது உரிய உதவியை பெற்றுக்கொடுத்தல் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஊடக மற்றும் தகவல் நிகழ்ச்சித்திட்டம் "சிற்சவிய": இலங்கையில் தேசிய சிறுவர் மையம் உளநல சம்பத்சஞ்சித்தய ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விசேட பிரஜைகளுக்கு அமுல்படுத்தப்படும் நிகழச்சிதிட்டம். (பொருந்தோட்டம், நகரம், தோட்டம், மதுபானத்திற்கு அடிமையாகியுள்ள மக்கள், சுற்றுலாப் பிரதேசம், வீட்டுப் பணிப்பெண்களாக சென்றுள்ள தாய்மார்களின் பிள்ளைகள், வீதியோர பிள்ளைகள், அங்கவீனமுற்ற பிள்ளைகள், தொழிற்படையிலுள்ள சிறுவர்கள்) இவ்வாறான நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படும்.

- **உரிய சிறுவர் பாதுகாப்பு பிரிவுகள் 10 இல் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் பற்றிய உளவளத்துணை, விழிப்புணர்வு செய்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு வளவாளர் பங்களிப்பினை வழங்குதல் மற்றும் ஆதரவுக் கருவிகளை அபிவிருத்தி செய்தல்.**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான வைத்திய பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் கற்கின்ற வைத்தியர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம், சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்கள் மற்றும் பணியாளர் குழாம் அங்கத்தவர்கள், தாதிமார்களை விழிப்புணர்வு செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படும். சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக மிகவும் ஆர்வமுள்ள தொழில்முனைவோரை உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கமாகும்.
இதன்கீழ் முதுநிலை பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனத்தில் கல்வி கற்கின்ற வைத்தியர்களுக்கு 02 நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வழிப்புணர்வு நிகழ்சிதிட்டம் அமுல்படுத்தப்பட்டது.

- **சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கைத்திட்டம் சம்பந்தமாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் அரசதுறை உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுதல்**

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கைத்திட்டம் சம்பந்தமாக மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுதல் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள் துறையில் உத்தியோகத்தர்களுக்கு ஒன்றிணைந்த பிரவேசத்தை மேம்படுத்துதல் இதன் நோக்கமாகும். இதன் கீழ் ஒரு நாள் பயிற்சிப்பட்டறைகள் 05 மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்டங்கள் 15 அமுல்படுத்தப்பட்டன. அதற்கான செலவு ரூ.மி.0.376 ஆகும்.

- **சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை ஒழித்தல் மற்றும் பதிலளித்தல் - சமூகத்தை மையப்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்கள்**

இந்த நிகழ்ச்சித்திட்டங்களின்கீழ் பிரதேச மட்டத்தில் சமூகத்தில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிசெய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சமய குருக்கள், அரங்காவலர்களை நம்பிக்கையாளர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தப்படும். இதுவரை 124 நிகழ்ச்சிதிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், இதற்கான செலவு ரூ.மி.1.305 ஆகும்.

- **ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் UNICEF**

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் சிறுவர் பாதுகாப்பு ∴ தொலைபேசி உதவிச்சேவையின் வழிப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான செலவு ரூ.மி.1.560 ஆகும்.

# 6.7 இலங்கை பெண்கள் பணியகம்

## அறிமுகம்

பெண்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்காக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்ற தேசிய ரீதியிலான பொறிமுறையாகும். பலமான நிறுவன அமைப்பொன்றை உருவாக்கி பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் தேவைகளை சமத்துவமான செயற்பாடொன்றின் வாயிலாக மேற்கொள்வதற்காக இலங்கை பெண்கள் பணியகம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

## பிரதான கடமைகள்

இலங்கைப் பெண்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்காக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை இனங்காணல், திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல். உள்ளிட்ட எல்லா வயதுக் குழுவிலும் உள்ள பெண்களின் விசேட தன்மைகளை இனங்கண்டு அவர்களை பொருத்தமான முறையில் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் பங்குதாரர்களாக உருவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் பிரதானமான கடமையாகும்.

பெண்கள் என்றவகையில் அவர்கள் முகங்கொடுக்கின்ற சமூக ரீதியான கஷ்டங்களை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல். சமூகத்தில் விசேட காரணங்களுக்காக பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்ற பெண்களை மையப்படுத்திய விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல். ஒட்டுமொத்த பெண்கள் பரம்பரையினதும் அறிவு, ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல். அத்துடன் பெண்களுக்கேயுரிய ஒரேயொரு நிறுவனமாகிய அதில் சுமுகமான செயற்பாடுகளை (Smooth Functioning) அமுல்படுத்துவதற்காக சனசமூக மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரையில் பெண்களை ஒரே வலையமைப்பில் ஒழுங்கமைத்தலும் பிரதானமான கடமையாகும்.

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 2023.09.30 வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

**1. வருமானம் மீட்பித்தலை மேம்படுத்துதல்**

பிரதேச ரீதியில் பரவலாக வளங்களைப் பாவித்து சந்தையில் கோரிக்கைகளுக்கு ஏற்றால்போல் உற்பத்திகளை மேற்கொள்வதற்காக நிபுணத்துவ அறிவு பெற்றுக்கொடுத்து பெண்களின் பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டமொன்றாகும்.

இதன்கீழ் குறைவருமானம் பெறுகின்ற நகரவாழ் பெண்கள், குறைவருமானமுள்ள பெண்கள், மீன்பிடிக் கைத்தொழில் சார்ந்த பெண்கள், பெருந்தோட்டங்களை சார்ந்த பெண்கள், அங்கவீனமுடைய பெண்கள், மற்றும் வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்துள்ள பெண்கள், வழிசேட காரணங்களுக்காக சமூக உணர்திறன் இழந்த பெண்கள், நீண்டகாலம் சிறைச்சாலையிலிருந்த குடும்பத்தவர்களின் பாதிக்கப்பட்ட பெண்கள், நெறிப்படுத்தப்படாத நுண்கடன் நிதித் திட்ட முறைகளினால் பாதிக்கப்படுகின்ற கிராமிய பெண்கள், பெண் தலைமைதாங்கும் குடும்பங்களின் பெண்கள் பொருளாதார ரீதியாக வலுவூட்டுதல் இடம்பெறும். 47 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூ.மி.6.3 செலவிடப்பட்டுள்ளது.

**2. அறிவு, மனப்பாங்கு மற்றும் ஆற்றல் விருத்தி செய்தல்**

**சகல வயதுக் குழுவிலும் உள்ள பெண்களின் விசேடமான தேவைகளை இனங்கண்டு அந்தத் தேவைகளை அடைந்துகொள்வதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதன்கீழ்,**

- **வருமான மீட்பித்தலுக்கான ஊக்குவிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

  29 நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்பட்டதுடன் அதற்கான செலவு ரூ.மி.0.472 ஆகும்

- **சிறுவர் இல்லங்களில் இருந்து வெளியேறுகின்ற 18 வயதுக்குக் குறைந்த சமூகத்துடன் சேர்வதற்கு இருக்கின்றவர்களுக்கு NVQ மட்டத்தில்** தாதியர் பயிற்சி வழங்குதல் மற்றும் தேவையான அடிப்படை **பயிற்சி வழங்குதல்.**

  இதன்கீழ் பயிற்சி நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்பட்டதுடன் அதற்கான செலவு ரூ.மி.0.731 ஆகும்.

**4. சந்தை மேம்படுத்தல் மற்றும் பெண்களின் உற்பத்திகளைக் காட்சிப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல்.**

தேசிய மட்டத்திலும் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டங்களில் விற்பனை ஊக்குவிப்புக்காக பெண்களின் உற்பத்தி விற்பனை சந்தை நடாத்தப்பட்டது. அதேபோல நிலையான விற்பனை இடங்கள் இல்லாத குறைவருமானமுடைய பெண்களுக்காக நடமாடும் விற்பனைக் கூடங்கள் வழங்கிவைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான செலவு ரூ.மி.0.180 ஆகும்.

**5. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

விசேட காரணங்களுக்காக பல்வேறு சிக்கலான விடயங்களுக்கு முகங்கொடுக்கின்ற பெண்களுக்காகவேண்டி அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். இதன்கீழ்.

- வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் இல.48.1 இன்கீழ் விதவைகள் வீட்டு தொழில்முயற்சியாளர்களைப் பலப்படுத்துதல். 124 செயற்றிட்டங்களுக்கு ரூ.மி.11.8 செலவிடப்பட்டுள்ளது.
- பெண் வீட்டுத் தலைமை உள்ள குடும்பங்களைப் பலப்படுத்துவதற்காக தேசிய நிலையத்தின் மூலம் வீட்டுத் தலைமை பெண்களுக்காக விசேட பொருளாதார வருமான மீட்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்னகள் 03 அமுல்படுத்தப்பட்டன. அதற்கு செலவான தொகை ரூ.மி.0.968 ஆகும்.

**6. சமூக ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

பெண் என்ற காரணத்திற்காக முகங்கொடுக்கின்ற கஸ்டங்களை தவிர்ப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் இதன் நோக்கமாகும். இதன்கீழ் நிலையங்களை செயற்றிறனுடன் இயக்கிச் செல்லல் மற்றும் பராமரித்தல் இடம்பெறும்.

- தற்காலிக பெண் காப்பகங்கள்

பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதிசெய்யும் நோக்கில் முன்னெடுக்கப்படுகின்ற நாடளாவிய ரீதியிலான தற்காலிக காப்பகங்கள் 10 பராமரித்து வரல்.

- கம்பஹா, மொனராகலை, இரத்தினபுரி - அமைச்சு
- கொழும்பு, மட்டக்களப்பு, அநுராதபும், மாத்தறை - பெண் உதவி நிலையம்
- யாழ்ப்பாணம், முல்லைத்தீவு - Jaffna Social Action Center
- அநுராதபுரம் (தம்புத்தேகம) - பெண் அங்கவீனர்களுக்கான சம்மேளனம்

இந்த காப்பங்களுக்கு வீட்டு வன்முறைகள் மற்றும் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் பெண்களை நீதிமன்ற உத்தரவின் பேரில், பொலிஸ், வைத்தியசாலைகளினால் அனுப்பிவைக்கப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களை மீண்டும் சமூகத்துடன் சேர்ந்த பிற்பாடு பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக வதிவிடத்துடன்கூடிய பராமரிப்பு காலத்தில் சுயதொழில் பயிற்சி வழங்கப்படும். அவர்களை சமூகமயப்படுத்திய பின்னரும் பின்னூட்டல்கள் தொடர்ச்சியாக இடம்பெறும். 252 பெண்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான செலவு ரூ.மி.7.718 ஆகும்.

- **உளவளத்துணை நிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்**

இலங்கை பெண்கள் பணியகத்தின்கீழ் நாடளாவிய ரீதியில் 12 உளவளத்துணை வழங்கும் நிலையங்கள் இயங்குகின்றன. அந்த உளவளத்துணை வழங்கும் நிலையங்கள் ஊடாக உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு சேவைகளை வழங்குவதுடன் உளவளத்துணை பெற்ற பயனாளிகளுக்கான பின்னூட்டல் நடவடிக்கைகளும் இடம்பெறும். இன்றுவரை சேவை பெற்றோரின் எண்ணிக்கை 1905 ஆகும் அதற்கான செலவு ரூ.மி.0.765 ஆகும்.

- **உளவளத்துணை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

உளவளத்துணை உத்தியோகத்தர் மற்றும் உளவளத்துணை உதவியாளர்களை விழிப்பூட்டுதல் Zoom தொழிநுட்பம் ஊடாக இடம்பெற்றது. அவற்றில் 5 நிகழ்ச்சித்திட்டங்கள் இதுவரை நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன.

**7. ஞாபகார்த்த தினங்கள்**

**சர்வதேச மகளிர் தின தேசிய வைபவம்**

''அவள் தேசத்தின் பெருமைக்குரியவள்'' என்னும் தொணிப்பொருளின்கீழ் 2023 மார்ச் மாதம் 08 ஆம் திகதி 300 பெண்களின் பங்குபற்றுதல்களுடன் பத்தரமுல்ல வோர்டர்ஸ் எட்ஜ் இல் அபிமானத்துடன் சர்வதேச மகளிர் தின வைபவம் நடாத்தப்பட்டது. அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதம மந்திரியின் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது. 25 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மகளிர் செயற்பாட்டு சங்கங்களின் 25 முயற்சியான்மையுடைய பெண்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. ஆண் பெண் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டும் தேசிய கொள்கைத்திட்டம் வெளியிட்டு வைத்தல் மற்றும் விரிவுரை, பல்வேறு துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி திறமைகளை வெளிப்படுத்திய சாதனைபடைத்த 04 பெண்களை கௌரவித்தல் மற்றும் இம்முறை உயர்தரப் பரீட்சையில் விசேட சித்தியடைந்து பல்கலைக்கழக வாய்ப்பினைப் பெறுகின்ற விசேட தேவையுடைய மாணவரை கௌரவித்தல் இடம்பெற்றன. மேலும் கான்தா சவிய, அருணோதய சஞ்சிகைகளை வெளியிட்டு வைக்கப்பட்டன.

- **மனநல சுகாதார தினம் அனுஷ்டித்தல்.**

அக்டோபர் 10 ஆம் திகதி மனநல சுகாதாரத்திற்கான தினம் அனுஷ்டிப்பதற்கான நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கை பூராகவும் பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் தேசிய மட்டத்தில் பரந்துபட்டுக் காணப்படுகின்ற உளவளத்துணை சேவை வழங்கும் உளவளத்துணை உத்தியோகத்தர்கள் மற்றும் உளவளத்துணை உதவியாளர்களின் அறிவு, மனப்பாங்கு விருத்தி செய்தல் மற்றும் கூட்டாக செயற்படுவதற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதேபோல உளவளத்துணை துறையில் உள்ள புதிய போக்குகள் பற்றியும் அவதானத்தில் கொள்ளல், உளவளத்துணை பிரச்சினைகளை இனங்கண்டு நாடளாவிய ரீதியில் உளவளத்துணை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் போன்ற விடயங்களையும் அடிப்படையாகக்கொண்டு விரிவுரைகளை நடாத்துதல்.

## 8. கண்காணித்தல், பின்னூட்டல் மற்றும் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு செய்தல்.

இலங்கை பெண்கள் பணியகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சகல நிகழ்ச்சித்திட்டங்களும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் கண்காணித்தலின் பேரில் மாவட்ட மட்டத்தில் பின்னூட்டல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு செய்யப்படும். பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் பற்றி இலங்கை பெண்கள் பணியகத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இங்கே நடைபெறும். இதுவரை 05 முன்னேற்ற மீளாயட்வுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

## 9. பெண்கள் வலையமைப்பினைக் கட்டியெழுப்புதல்.

பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டுவதற்காக கிராம அலுவலர் பிரிவுகளில் 18 வயதுக்கு மேற்பட்ட சகல பெண்களையும் ஒன்றுதிரட்டி பெண்கள் செயற்பாட்டு சங்கங்களை ஸ்தாபித்து பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் பெண் உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதல்களுடன் பிரதேச பெண் செயற்குழுக்களை ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பெண்களை மாவட்ட மட்டத்தில் ஒன்றுதிரட்டி 25 மாவட்டங்களையும் தொடர்புபடுத்தி பெண் உத்தியோகத்தர்கள் ஊடாக மாவட்ட பெண்கள் செயற்குழு ஸ்தாபிக்கப்படும். இந்த வலையமைப்பு ஊடாக அகில இலங்கை பெண்கள் சமூகமும் நாட்டின்

அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்காகவும், இலங்கை மகளிர் பணியகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.

- பெண் செயற்குழுக்கள் (வலய மட்டத்தில்) 12881
- பிரதேச பெண் செயற்குழுக்கள் (பிரதேச மட்டத்தில்) 316
- மாவட்ட பெண் செயற்குழுக்கள் (மாவட்ட மட்டத்தில்) 25 இயங்குகின்றன.

**2023 வெளிநாட்டு நிதியைப் பாவித்து மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்டங்கள்**

- முயற்சியான்மை, தலைமைத்துவம் மற்றும் வலையமைப்புருவாக்கம் ஊடாக பெண்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல் - JICA (ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மூலம் அமுல்படுத்தப்படும்.) ஊடாக மகளிர் செய்ற்பாட்டு அமைப்பினை புணரமைத்தல் மற்றும் பெண் தொழில்முயற்சியாரை வலுவூட்டுவதற்கான செயற்திட்டங்கள் அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகின்றன. செயற்றிட்ட காலப்பகுதி 2023 - 2027 வரையாகும்.
- தற்காலிக காப்பகங்களுக்கு உபகரணங்கள் மற்றும் பொருட்களை வழங்கும் செயற்றிட்டம் மற்றும் சமூக பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்தல், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவசர உதவி வழங்கும் செயற்றிட்டம் - UN Women (ஐக்கிய நாடுகள் பெண்கள் பிரிவு) மூலம் அமுல்படுத்தப்படும். அதனூடாக 10 தற்காலி காப்பகங்களுக்காக உணவு, உடை, முதலுதவி, சுகாதார,காகிதாதிகள் என்பன இதன் கீழ் பொருட்களாக இவ் உதவி, தற்காலிக காப்பங்கள் 11 கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், வவுனியா, மொணராகலை, அம்பாறை, கொழும்பு, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் தொழிலிமுயற்சியாளர்கள் 600 பேருக்கு பயிற்சி திட்டம்15 அமுல்படுத்தப்பட்டது. செயற்றிட்ட காலப்பகுதி 2023 ஆகஜ்ட் தொடக்கம் 2024 ஜனவரி வரையாகும்.
- நுவரெலியா மாவட்டத்தில் நிலைபேரான சனசமூக அடிப்படையான குடும்பங்களை வலுவூட்டுதல் - Semaul (செமாவுல் மன்றம்) மூலம் ஒப்பதம் கைசாத்திடுதல், 2023 ஆகஸ்ட் 25 ஆம் திகதி அங்குரார்ப்பண விழா ஆரம்பித்தமை, சாந்திபுர பாடசாலையினை பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2022 - 2026 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்படும்.
- உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வருமான மீட்பித்தலுக்கான அவசர உதவி செயற்றிட்டம் - தொழில், வான்மை விருத்தி, பயிற்சி வழங்குதல் மற்றும் குறைந்த வருமானமுடைய பெண்களுக்கான உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் - ADB (ஆசிய அபிவிருத்தி வங்கி) மூலம் 2023.09.30 வரை ரூ.மி.0.443 செலவுகள் மேற்கொள்ளப்படதுடன் இது 2022 - 2024 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்படும்.
- பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்றிட்டம் - UNFPA (ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்) வருடாந்த நிதியொதுக்கீட்டின்கீழ் அமுல்படுத்தப்படும். தற்காலிக காப்பகத்திற்காக CDMA தொலைபேசி 42 இற்கான பில்கொடுப்பனவு, திறன்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சிதிட்டத்தினை அமுல்படுத்துவதற்கான கலந்துரையாடலை மேற்கொண்டமை. தற்காலிக காப்பத்தினை கண்காணித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. செலவு ரூ.மி. 0.208 ஆகும்
- தேசிய மட்டத்தில் உளவத்துணை பகுப்பாய்வுக்கான பரீட்சார்த்தமான செயற்றிட்டம் மற்றும் அதனோடு இணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் - Asian Foundation (ஆசியான் மன்றம்) – ஊடாக உளவளத்துணை உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உதவியாளர் 130 பேருக்கு டிஜிட்டல் முறையை பயன்படுத்துவற்கான திறன்களை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சிதிட்டம் Zoom தொழில்நுட்பத்தினூடாக உளவளத்துணை உத்தியோகத்தர், உளவளத்துணை உதவியாளரகளுக்கு 05 வான்மை விருத்தி செயலமர்வு நடாத்தப்பட்டது.

# 6.8 தேசிய பெண்கள் கமிட்டி

## அறிமுகம்

பெண்கள் சாசனத்தில் உள்ளடங்கிய ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பதற்காக 1993 மார்ச் மாதம் 08 ஆம் திகதி தேசிய பெண்கள் கமிட்டி ஸ்தாபிக்கப்பட்டது. பெண்களின் நன்நிலை, பாதுகாப்பு, பராமரிப்பு உரிமைகளைப் பாதுகாப்பதற்காக கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்குகின்ற தேசிய நிறுவனமாகும்.

## பிரதான கடமைகள்

சமத்துவத்மத உறுதிசெய்தல், வன்முறையற்ற, பெண்களுக்கு விருப்பமான இலங்கை சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய பெண்கள் கமிட்டியின் பிரதான கடமைகளாக இலங்கைப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தலை மேம்படுத்தல், சமத்துவத்தை உறுதிசெய்தல் மற்றும் முழு விருத்திக்கு உதவும் கொள்கைகள் மற்றும் சட்ட திட்டங்களைத் தயாரித்தல். இதற்காக தேசிய கமிட்டி மூலம் சான்றுப்படுத்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்து மீளாய்வு செய்யப்படும். அதன்பிரகாரம் தேசிய கமிட்டியில் முறைப்பாட்டு நிலையம் மற்றும் 24 மணித்தியாலங்களிலும் தேவையான உதவிச் சேவைகளை 1938 பெண்கள் உதவிச் சேவைகளை அமுல்படுத்தப்படும்.

- **முறைப்பாடு தெரிவிக்கும் நிலையம்**

ஆண் பெண் பால்நிலை மீதான பாரபட்சங்கள், அநியாயங்கள் என்னும் உரிமைகள் மீறப்படுதல் சம்பந்தமான முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அந்த முறைப்பாடுகளை விசாரித்து தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கின்ற விடயத்தில் அரசாங்கம் உட்பட அரச சார்பற்ற அமைப்புகளுக்கு அனுப்புவதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் சட்ட உதவி, உளவளத்துணை சேவைகள் உள்ளிட்ட நிவாரணங்களை வழங்குவதும் முறைப்பாடுகளைப் பெறுகின்ற நிலையத்தின் பணியாகும். முறைப்பாடுகளைப் பெறுகின்ற நிலையத்திற்கு வருகைதந்து, கடிதங்கள் மூலம், மின்னஞ்சல் மூலம் மற்றும் தொலைபேசி அழைப்பு ஊடாக அலுவலக நேரத்தில் முறைப்பாடுகளைப் பொறுப்பளிக்கும் வாய்ப்பு உண்டு. முறைப்பாடு தெரிவிக்கும் நிலையத்திற்குக் கிடைத்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 288 ஆகும். இந்த முறைப்பாடுகளின் தன்மைக்கேற்ப உரிய சேவைகளை வழங்கிவைக்கப்படும்.

- **1938 பெண்கள் உதவி தொலைபேசி சேவை**

தேசிய பெண்கள் கமிட்டியின் கடமைகளை தொடர்ந்து வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையின்மீது 1938 கட்டணமின்றிய உதவி தொலைபேசி சேவை எல்லா நாட்களிலும் 24 மணித்தியாலங்களிலும் மும்மொழிகளிலும் அமுல்படுத்தப்படும். இந்த சேகைக்கு உரிய முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல், தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல், பின்னூட்டல் வழங்குதல், ஆலோசனை வழங்குதல், சட்ட உதவி வழங்குதல் மற்றும் உரிய ஏனைய நிறுவனங்களுக்கு முறைப்பாட்டாளர்களை அனுப்புதல் போன்ற கடமைகளை மேற்கொள்கின்றது. அதன்பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாத இறுதியில் கிடைக்கப்பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2612 ஆகும். அதில் 408 உளசமூக உளவளத்துணைக்கு உரிய உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பிவைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 235 ஆகும். பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்தின் தலைமையகத்திற்கு 41 முறைப்பாடுகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 2023.09.30 வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

### 1. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

- **பகுதிநேர வகுப்பு உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களின் பிள்ளைகளை விழிப்பூட்டுதல்** சைபர் குற்றம், பொதுப் போக்குவரத்தில் இடம்பெறுகின்ற வன்முறைகள் மற்றும் சுகாதார கல்வி சம்பந்தப்பட்ட விழிப்புணர்வு செய்தல்.

பொதுப் போக்குவரத்தில் மற்றும் இணையத்தில் கட்டிளம் பருவத்தினர்க்கு இடம்பெறுகின்ற வன்முறைகளை ஒழித்தல் மற்றும் கட்டிளம் பருவத்தில் அவர்கள் முகங்கொடுகின்ற சவால்களை வெற்றிகொள்வதற்கான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு விருத்தி செய்வதை நோக்கமாகக்கொண்டு குருணாகல் மாவட்டத்தில் 200 பயனாளிகளுக்கு நடாத்தப்பட்டது.

- **தொழில் செய்யுமிடத்தில் பாலியல் துன்புறுத்தல்களைக் குறைப்பதற்காக கைத்தொழில் துறையிலுள்ள ஊழியர்களை விழிப்பூட்டுதல்**

தொழில் செய்யுமிடத்தில் பெண்களின் வன்முறையைக் குறைப்பதற்காக இலங்கை முதலீட்டு சபை உள்ளிட்ட தனியார் நிறுவனங்களில் பெண்கள் மீதான வன்முறைகளைக் குறைத்தல் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்மலானை "லங்கா சோய்" நிறுவனத்தின் 175 ஊழியர்களை விழிப்புணர்வு செய்வதற்காக நடாத்தப்பட்டது.

### 2. வான்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவுகளில் உள்ள உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கின்ற வான்மை விருத்தி நிகழ்ச்சிகள்

பால்நிலை மற்றும் ஆண் பெண் சமத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட சைபர் குற்றங்களை ஒழிதல் சம்பந்தமான பயிற்சியொன்றை அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் இதன் பிரதான நோக்கமாகும். அதன்பிரகாரம் இந்த 2023 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதம் வரை இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் களுத்துறை மாவட்ட நிகழ்ச்சி மற்றும் குரணாகல் மாவட்ட நிகழ்ச்சிகளில் 120 பயனாளிகளுக்கு நடாத்தப்பட்டது.

- **அரசியலில் பெண்களை வலுவூட்டுவதற்காக பிரதேச மட்டத்திலான கட்சி அலுவலகங்களின் பிரதிநிதிகளுக்கான வான்மை விருத்தி நிகழ்ச்சிகள்**

அரசியலில் பிரவேசிப்பதற்குத் தேவையான அறிவு, ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்குகள் மூலம் பெண் தலைமைதாங்குபவர்களை உருவாக்குதல் மற்றும் அரசியல் பிரவேசத்திற்காக பெண்களை ஊக்குவிக்கும் நோக்கில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித்திட்டத் தொடரின் ஒரு நிகழ்ச்சி இரண்டு நாட்களுக்கு நடைபெறுவதுடன் அதன் முதல் இரண்டு நிகழ்ச்சிகளும் கம்பஹா மாவட்டத்தில் நடாத்தப்பட்டன.

### 3. கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள்

- **பாராளுமன்றம் மற்றும் மாகாண சபை தேர்தல்களில் பெண்களுக்கான ஒதுக்கீட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.**

பெண்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தி முரண்பாடுகளைக் குறைத்து பெண்களை முறையான அரசியல் செயற்பாட்டாளர்களாக உருவாக்கும் நோக்கில் இந்த வருடத்தில் தேர்தல்கள் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுடன்அஇ கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 6.9 சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)

## அறிமுகம்

இலங்கையின் வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக நியாயத்தினை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளினை மேம்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு ஏழை மனிதனிடமும் மறைந்திருக்கும் சாத்தியக்கூறுகளினை நசுக்கும் தடைகளினை நீக்கி அக்குடும்பங்களினை வலுவூட்டுதல், சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க திவிநெகும (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க திவிநெகும் சட்டத்தினூடாக நிறுவப்பட்டுள்ளது.

## கடமைப் பொறுப்பு

- தனிநபர், குடும்பம், குழு மற்றும் சமூகம் சார்ந்த பொருளாதார மேம்பாடு, வாழ்வாதார மேம்பாடு, நிறுவன மேம்பாடு மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- "அஸ்வசும" நலன் பயன் முன்மொழிவுகள் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள குடும்பங்களினை, பொருளாதாரம், சமூகம் மற்றும் உள ரீதியில் வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு நுண்நிதிக் கடன் வசதிகளினை வழங்குதல் மற்றும் அக்குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.

## 30.09.2023 வரை முக்கிய வளர்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் உடல் முன்னேற்றம்

### 1. வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

- இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 01 நடாத்தப்படுதல்,
- சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் 755 ஏக்கர் மேலதிகமாக பயிர் வளர்ப்பு இடம்பெறுதல் (1,488 பயனாளிகள், ரூபா. 19.70 மில்லியன் )வேளாண்மை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் கீழ் முந்திரி ஏற்றுமதி கிராம செயற்திட்டத்தினூடாக மேம்படுத்தப்படும் 54 முந்திரி பதப்படுத்தும் நிலையங்களினை (100 வேலைவாய்ப்புக்கள்) மேம்படுத்துதல் (வனாத்தவில்லுவ) இடம்பெற்றுள்ளது. 05 மாவட்டங்களில் 09 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. (ரூபா. மில்லியன் 9.71)

### 2. தொழில்முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

- 1 தின்பண்ட நிலையம் கெக்கிராவ வில் நிறுவப்பட்டுள்ளதுடன், 11,155 தொழில்முனைவோருக்காக 275 தொழில்முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் 08 மாவட்டங்களில் நடத்தப்படுதல்,
- 606 வர்த்தக கண்காட்சிகள் நடத்தப்படுதல்.
- ஜப்பானிய மொழி பயிற்சி நிகழ்ச்சிகள் 7 மையங்களில் தொடங்கப்பட்டுள்ளதுடன், JLPT - 238 மாணவர்களில் 75 பேர் மற்றும் N 5- 51 மாணவர்களில் 25 பேரும் தேர்ச்சி பெற்றனர்.
- 25 மினி பூட் சிட்டியினை தொடங்குவதற்கான தளங்கள் கண்டறியப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. (உலக உணவுத் திட்டம்)
- அனைத்து 8,000 இளைஞர்களுக்கும் தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளை நடத்துங்கள் (Y-lead நிறுவனம், ரூ. 7.00 மில்லியன்)

### 3. சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம்

- போதைப்பொருள், புகைத்தல் தடுப்பு, வீட்டு முகாமைத்துவம் மற்றும் "மகிழ்ச்சியான குடும்பம்" நிகழ்ச்சித் திட்டங்கள் 550 (பயனாளிகள் 31.813) நடாத்தப்படுதல், 1020 துப்புரவு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல் (பயனாளிகள் 82,707), சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 121 நடாத்தப்படுதல் (4,061 உத்தியோகத்தர்கள்). (திறைசேரி ஒதுக்கீடுகள்)
- பிற நிதி அனுசரணையின் கீழ் போதைப் பொருள், புகைத்தல் தடுப்பு, வீட்டு முகாமைத்துவம் மற்றும் "மகிழ்ச்சியமான குடும்பம்" நிகழ்ச்சித் திட்டங்கள் 4,435 (233,378 பயனாளிகள், ரூபா. 10.44 மில்லியன்) நடாத்தப்படுதல், துப்புரவு நிகழ்ச்சித் திட்டங்கள் 15,576 நடாத்தப்படுதல் (பயனாளிகள் 107,696, ரூபா. 2.09 மில்லியன்), சமுர்த்தி கெகுளு சிறுவர் சமூகம், கலாசார மற்றும் எழுத்தறிவு நிகழ்ச்சித் திட்டங்கள் 4,265 (192,596 பயனாளிகள், ரூபா. 14.41 மில்லியன்) நடாத்தப்படுதல், சர்வதேச தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 3,904 (201,747 பயனாளிகள், ரூபா. 26.55 மில்லியன்) நடாத்தப்படுதல், சமூக அபிவிருத்தி

உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 443 (754,801 பயனாளிகள், ரூபா. 0.75 மில்லியன்) நடாத்தப்படுதல், முன்னேற்ற மீளாய்வு செயலமர்வுகள் 279 (ரூபா. 3.09 மில்லியன்) நடாத்தப்படுதல்.

## 4. சமூக அடிப்படையிலான அமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

- இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலுவூட்டுவதற்காக 294 பொருளாதார அமைப்புக்களினை அடையாளம் காணுதல் மற்றும் 9 மாவட்டக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தினூடாக 25 மாவட்டக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுதல் (ரூபா. 0.70 மில்லியன்), சமுதாய அடிப்படையிலான தலைவர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் 332 நடாத்தப்படுதல் (ரூபா. 1.20 மில்லியன்), மாவட்ட மற்றும் தேசிய மட்ட விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 9 நடாத்தப்படுதல் (6,765 பயனாளிகள், ரூபா. 0.90 மில்லியன்), தேசிய மகாநாட்டிற்கு இணையாக சமுர்த்தி உத்தம பூஜா தலைவர்களினைப் பாராட்டும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும இளைஞர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியீட்டிய குழுவினைப் பாராட்டுதல் (ரூபா. 7.50 மில்லியன்)

## 5. தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம்

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்படுதல், மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்கள் 335 தொடர்பில் இணைய வசதிகளினை வழங்குதல். A+ நிகழ்ச்சித் திட்டம் - SLIDA நிறுவனத்தில் நடாத்தப்படுதல், பிற IT நிகழ்ச்சித் திட்டங்கள் 7 நடாத்தப்படுதல், (ரூபா. 3.09 மில்லியன்)

## 6. மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வாதாரத்துடனான செயற்திட்டம் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்படுதல் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான 7 அகநிலை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 2 டிப்ளோமா நடாத்தப்படுதல் இடம்பெற்றுள்ளது. 3 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் செலவு செய்யப்பட்ட நிதி ரூபா. 1.47 ஆகும். (திறைசேரி ஒதுக்கீடுகள்)

## 7. ஊடக மற்றும் விளம்பர நிகழ்ச்சித் திட்டம்

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தி E news papers 6 வெளியிடப்படுதல், "சமுர்த்தி உதானய" தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 20 ஒளிபரப்பப்படுதல் இடம்பெற்றுள்ளதுடன், செலவு செய்யப்பட்டுள்ள நிதி ரூபா. 6.65 மில்லியனாகும். (திறைசேரி ஒதுக்கீடுகள்)

## 8. திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம்

தேசிய மட்டத்தில் 06 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் 75 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல், 2022 செயற்திறன் அறிக்கை மற்றும் மத்திய வங்கிக்கான மத்திய ஆண்டு அறிக்கையினை தயாரித்தல், "அஸ்வசும" தொடர்பிலான செயலமர்வு நடாத்தப்படுதல் இடம்பெற்றுள்ளதுடன், செலவு செய்யப்பட்ட நிதி ரூபா. 0.57 மில்லியனாகும். (திறைசேரி ஒதுக்கீடுகள்)

## 9. சமுர்த்தி நிவாரண உதவியினை வழங்குதல்

ஜனவரி தொடக்கம் யூன் வரை வழமையான பயனாளிகள் - 1,637,672, மேலதிக கொடுப்பனவுகள் - 1,637,672, காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகள் - 719,666 தொடர்பில் சமுர்த்தி நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளதுடன், அஸ்வசும பயன்கள் கிடைக்காத பயனாளிகள் - 368,310 பேருக்கு பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.

* ஜனவரி மாதம் தொடக்கம் யூன் மாதம் வரை இலக்காகக் கொண்ட பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளினை வழங்குதல் இடம்பெற்றுள்ளதுடன், ஜூலை மாதத்திலிருந்து "அஸ்வசும" நலன்புரி பயன்கள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்வாங்க விண்ணப்பித்த மற்றும் தற்போதைக்கு தெரிவு செய்யப்படாத 393,094 சமுர்த்திப் பயனாளிகளுக்கு "அஸ்வசும" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபணைகளினை மீள்பரிசீலனை செய்யும் செயல்முறை முழுமையாக முடியும் வரை சமுர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொடுப்பனவினை செலுத்துவதற்கு PS/NC/EAD/148/2023 என்ற அமைச்சரவைத் தீர்மான இலக்கத்தினூடாக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

## 10. சமுர்த்தி வங்கி மற்றும் நுண் நிதிக் கடன் நிகழ்ச்சித் திட்டம்

- சமுர்த்தி வங்கி மற்றும் நுண் நிதி நிதியத்தின் கீழ் நுண் நிதிக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக 174,586 கடன்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் நிதி முன்னேற்றம் ரூபா. 18,242.54 ஆகும்.
- வங்கி மற்றும் வங்கிச் சங்க அதிகாரிகளுக்கு கணக்கியல், வணிக ஆய்வுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான 9 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (455 பயனாளிகள்) நடாத்தப்படுதல், நுண்நிதிய வங்கி நிதியத்தின் நிதி அனுசரணையுடன் இடம்பெற்றுள்ளதுடன், அது தொடர்பில் செலவு செய்யப்பட்ட நிதி ரூபா. 6.77 மில்லியனாகும்.

## 11. சமூகப் பாதுகாப்பு பயன்கள் நிகழ்ச்சித் திட்டம்

சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் சமூகப் பாதுகாப்பு பயன்கள் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக 94,615 பயனாளிகளுக்கு ரூபா. 886.67 மில்லியன் பயன்கள் வழங்கப்பட்டுள்ளதுடன். “சிப்தொர” புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 335,559 பயனாளிகளுக்கு ரூபா. 463.03 மில்லியன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 12. வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

வீடமைப்பு லொத்தர் நிதியத்தின் கீழ் அமுலாக்கப்படும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக 4,145 வீடமைப்பு அலகுகள் தொடர்பில், ரூபா. 1,020.75 மில்லியன் ஒதுக்கீடுகள் பெறப்பட்டுள்ளன.

## 13.பிற அபிவிருத்தி செயற்திட்டங்கள்.

- தரம் 1 தொடக்கம் 5 வரையான 62,934 பிள்ளைகளுக்கு பயிற்சிப் புத்தகங்களினை வழங்கும் 605 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. (செலவு ரூபா. 15.02 மில்லியன்)
- 345 முன்பள்ளிகளின் 6900 பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுதல்.
- உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4,715 பயனாளிகளுக்கு, பயனாளி ஒருவருக்கு ரூபா. 22,500/- என்றவாறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன (செலவு ரூபா. 106.9 மில்லியன்)
- சமுதாய அடிப்படை சமுர்த்தி மாணவர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 8,883 மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகங்கள் வழங்கப்படுதல் (செலவு ரூபா. 18.00 மில்லியன், தேசிய சமூக அபிவிருத்தி நிதியம்)
- சமுதாய அடிப்படை சமுர்த்தி மாணவர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 62,000 மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகங்களினை வழங்குதல். (செலவு ரூபா. 11.55 மில்லியன், சமுதாய அடிப்படை அமைப்புக்களின் நிதியம்)

# 6.10 சமூக சேவைகள் திணைக்களம் (DSS)

## அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சமூக சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட பிரிவினருக்கு சிறந்த சூழலினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இத்திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளது.

### கடமைப் பொறுப்பு

- அங்கவீனமுற்ற சமுதாயத்தினை புனர்வாழ்வளித்தல், முழு நேரமும் வதிவிடத்தில் வைத்துப் பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் வலுவூட்டுதல்.
- போதைப் பொருள் மீட்பு தொடர்பில் தலையீடு செய்தல்.
- விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- தற்போதைய சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ச்சிகள்/ஆய்வுகளினை நடாத்துதல், தலையீடு செய்தல் மற்றும் கொள்கைகளினை வகுத்தல்.

## 30.09.2023 வரை முக்கிய வளர்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் உடல் முன்னேற்றம்

**1. அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்..**

16-35 வயதிற்கு இடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்காகக் கொண்டு 11 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் நாடுபூராவும் செயலாக்கப்படுகின்றன. இதன் கீழ் 473 பயிலுனர்களுக்கு வாழ்க்கைகத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் அன்றாடக் கொடுப்பனவுகளினை வழங்குதல் இடம்பெற்றுள்ளது.

**2. அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் முன் வாழ்க்கைத் திறன் விருத்தி**

14-30 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் யுவதிகளினை எதிர்கால வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு முன்வைப்பதற்காக அமுலாக்கப்படும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 38 பேரின் திறன் விருத்தியினை முன்னெடுத்தல் இடம்பெற்று வருகிறது.

**3. அங்கவீனமுற்ற நபர்களுக்கு முன்கூட்டியே தலையீடு செய்வதனூடாக அவர்களினை ஒன்றுதிரட்டும் கல்விக்கு முன்வைத்தல்.**

06 மாதங்கள் தொடக்கம் 16 வயது வரையிலான அங்கவீனமுற்ற பிள்ளைகளின் அங்கவீனத்தினை இனங்கண்டு அங்கவீனத்தினைக் குறைத்து அவர்களினை விருத்தி செய்தல் தொடர்பில் திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படும் 02 நிறுவனங்களினூடாக 119 பிள்ளைகளுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றன.

**4. பாதுகாவலர்களினைக் கொண்டிராத மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பினை வழங்குதல்.**

திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படும் 02 பாதுகாப்பு நிலையங்களினூடாக 88 அங்கவீனமுற்ற நபர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

**5. அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி தொடர்பில் முன்னெடுக்கப்படும் தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவிகளினை வழங்குதல்.**

நாடுபூராவும் அமுலாக்கப்படும் 27 நிறுவனங்களினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவிகளினை வழங்குதல் மற்றும் அந் நிறுவனங்களில் 225 பயனாளிகளுக்கு உதவிகளினை வழங்குவது இடம்பெற்றுள்ளது.

**6. போதைப் பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல்.**

புவக்பிட்டிய ஜயவிரு சமாதி நிறுவனத்தினூடாக போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் 77 பேரினை புனர்வாழ்வளித்தல் மற்றும் மாவட்ட மட்டங்களில் போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னெடுப்பதற்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**7. சமுதாய மட்டப் புனர்வாழ்வு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தேவையான சேவைகளினை வழங்குதல்.**

- 10 அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவிசார் உபகரணங்களினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு 1561 புனர்வாழ்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- பிராந்திய, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் 1,460 "சுயஉதவி" குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு ரூபா. 3.49 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

**8. உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குதல்**

305 உத்தியோகத்தர்களுக்கு 14 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், செலவு ரூபா. 1.12 மில்லியனாகும்.

**9. நடாத்தப்பட்ட தேசிய நிகழ்வு**

- சுவாபிமானி தேசிய விருது வழங்கும் விழா 2023.08.03 ஆந் திகதி களுத்துறை மாவட்டச் செயலகத்தில் நடாத்தப்பட்டுள்ளது.
- சைகை மொழி தினக் கொண்டாட்டம் 2023.09.23 ஆந் திகதி பத்தரமுல்ல செத்சிறிபாய வளாகத்தில் நடாத்தப்பட்டது. இதில் செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கான சர்வதேசக் கொடியினை அறிமுகம் செய்தல், சைகைமொழி தொடர்பான யூ டியூப் அலைவரினை மற்றும் சைகை மொழிபெயர்ப்பாளர்களுக்கான தொழில்சார் கொள்கைகளுடன்கூடிய நெறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

**10. விழிப்புலனற்ற நபர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்**

பார்வைக் குறைபாட்டினைக் கொண்ட நபர்களுக்குத் தேவையான வசதிகளினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணங்களினை வழங்குவதற்கு 1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க விழிப்புலனற்ற புனர்வாழ்வு நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் விழிப்புலனற்றோர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் அமைக்கப்பட்டுள்ளதுடன், பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

- க.பொ.த. (சா.த), (உ.த.) மற்றும் பட்டத்தனை தொடரும் 341 மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளினை வழங்குதல்.
- 9 பிரெய்ல் சஞ்சிகைகளினை வெளியிடுதல்.
- 3 நபர்களுக்கு கண்வில்லைகளினை வழங்குதல்.
- 03 பயிலுனர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளினை வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதிச் செலவு ரூபா. 3.65 மில்லியனாகும்.

**11. பிற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

- **அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு தொழில் உதவியினை ஊக்குவிப்பதற்கான செயற்திட்டம். (ESPD)**

  அங்கவீனத்தினைக் கொண்ட தொழில் தேடுபவர்களுக்கு பிரத்தியேகப் பிரிவில் தொழில் வாய்ப்பு உதவியினை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் ஒன்றிணைந்து 2021 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டத்தின் கீழ் ஆரம்பத்திலிருந்து இது வரை பல்வேறு பிரத்தியேக நிறுவனங்களினுள் 98 அங்கவீனமுற்ற நபர்கள் வெற்றிகரமாக தொழிலில் ஈடுபடுத்துதல் இடம்பெற்றுள்ளது.

- Child fund நிறுவனத்தின் உதவியுடன் 05 புதிய வாழ்க்கைத் தொழில் பயிற்சிப் பாடநெறிகளுக்கான விடயப் பரிந்துரைகளினைத் தயாரித்தல்.
- UN Women நிறுவனத்தினூடாக மனுசத் பியச மகளிர் பாதுகாப்பு நிலையத்தின் 06 மாதங்களுக்குத் தேவையான உணவு, சுகாதாரம், முதலுதவி, உடைகள் மற்றும் எழுதுகருவிகளினை வழங்குதல்.
- 05 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினை விசேடமான நிறுவனங்களாக மேம்படுத்துவதற்கான அடிப்படைச் செயற்பாடுகளினை ஆரம்பித்தல்.
- ILO மற்றும் Automobile Council ஒன்றிணைந்து பயிற்சி நிலையத்தில் பயிலுனர்களினை பணிக்கமர்த்துவதற்கான நடவடிக்கைகளினை ஆரம்பித்தல்.
- நாடுபூராவுமுள்ள மாநகர சபை மற்றும் நகர சபை எல்லைகளிலுள்ள பிச்சைக்காரர்கள் தொடர்பிலான கணக்கெடுப்பினை முன்னெடுத்தல். தொடர்பில் பூர்வாங்க நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகிறது.
- 05 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினை விசேடமான நிறுவனங்களான மேம்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல்.

## 6.11 சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)

### அறிமுகம்

சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகத்தினூடாக கிராமப்புற மக்களினை நேரடியாக உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தி தேசிய உற்பத்தியினை அதிகரிப்பதற்காக சௌபாக்யா உற்பத்திக் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும் வளங்களின் கிடைக்கும் தன்மை, உற்பத்தித் திறன், சந்தைத் தன்மை மற்றும் நிலைபேறான தன்மை அமுலாக்கும் இயலுமையினை அடிப்படையாகக் கொண்டு, பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களினை உற்பத்தி செய்யும் அல்லது சேவைகளினை வழங்கும் கிராமங்கள், உற்பத்திக் கிராமங்களாக உருவாக்கப்படுகின்றன.

### கடமைப் பொறுப்பு

வீட்டுடன் தொடர்பிலான உற்பத்திகளினை ஊக்குவித்து கிராமிய மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்தி கிராமியப் பொருளாதாரத்தினை மேலோங்கச் செய்தல், உள்ளூர் உற்பத்திகளினை வலுவூட்டுதல், பிரபலப்படுத்துதல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதனூடாக வேலையில்லாத் திண்டாட்டத்தினகை குறைத்தல் முக்கிய பணிகளாகும்.

### 30.09.2023 வரை முக்கிய வளர்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் உடல் முன்னேற்றம்

#### i. திறைசேரி ஒதுக்கீடுகளுடன் செயற்திட்டங்களினை அமுலாக்குதல்.

2023.09.30 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட 58 செயற்திட்டங்களின் 3,692 பயனாளிகளுக்கு ரூபா. 121.96 மில்லியன் ஒதுக்கீடுகள் மாவட்ட செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் செலவு ரூபா. 5.3 மில்லியனாகும்.

#### ii. திறைசேரி ஒதுக்கீடுகளில்லாது செயற்திட்டங்களினை அமுலாக்குதல்

- **புதிய கிராமங்களினை உருவாக்குதல்.**

பல்வேறு நிறுவனங்களினூடாக வழங்கப்பட்ட அரைகுறையாகப் பயன்படுத்தப்பட்ட எந்திரங்களினைப் பயன்படுத்தி 60 பயனாளிகளுக்கு அரச ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்தாது 2 ஆடை உற்பத்திக் கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **ஏற்கனவே உள்ள கிராமங்களினை மேம்படுத்துதல்.**

மேம்படுத்தப்பட்ட மொத்தக் கிராமங்களின் எண்ணிக்கை 77 என்பதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 3,396 ஆகும். கிராமங்களின் தேவையினை மேம்படுத்துவதற்கு பின்வரும் மூலோபாயங்கள் பயன்படுத்தப்பட்டன.

**1. தேவையான உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்/உள்ளீடுகளினை வழங்குதல்.**

2 செயற்திட்டங்களின் 78 பயனளாளிக்கு உற்பத்திச் செயற்பாடுகளுக்காக அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**2. விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.**

29 உற்பத்திக் கிராமங்களின் 263 பயனாளிகள் தொடர்பிலான கொள்வனவாளர்களினை இணைத்தல், நிறுவன ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்வைத்தல் போன்ற விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

### 3. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்

கடந்த வருடங்களில் நிறுவப்பட்டுள்ள 46 உற்பத்திக் கிராமங்களின் 3095 பயனாளிகளுக்கு 2023 ஆம் ஆண்டில் பல்வேறு அரச நிறுவனங்களினை இணைத்து பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் அடிப்படையில் உளப்பாங்கு விருத்தி மற்றும் வணிக விருத்தியுடன் தொடர்பிலான 30 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், 2254 பயனாளிகளுக்கு நடாத்தப்பட்டுள்ளதுடன், பெறுமதி சேர்ப்பினை உள்ளடக்கி 16 தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 841 பயனாளிகளுக்கு நடாத்தப்பட்டுள்ளன.

# 6.12 அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)

## அறிமுகம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் செயலகம் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கவீனமுற்ற நபர்களுக்கான நட்புடனான சாதகமான சூழலொன்றினை உருவாக்குவதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரியினை உள்ளிட்ட நிவாரணங்களினை வழங்கும் நோக்குடன், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினூடாக எடுக்கப்பட்ட கொள்கைசார் தீர்மானங்களினை அமுலாக்குதல் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக இடம்பெறுகிறது.

## கடமைப் பொறுப்பு

- அங்கவீனமுற்ற நபர்களுக்க்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குவதற்காக அவர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் உரிமைகளினைப் பாதுகாத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு தங்குமிட வசதிகளினை வழங்கி அவர்களுக்குப் பாதுகாப்பு வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் நபர்கள் தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளினை செயலாக்குதல், ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் உதவிகள் வழங்குதல்.
- பௌதிகச் சூழலினை உகந்தவாறு அமைத்தல் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளினைத் தயாரித்தல் மற்றும் வழிகாட்டல்களினை வழங்குதல்.
- அங்கவீனம் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களினைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், புனர்வாழ்வளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

## 30.09.2023 வரை முக்கிய வளர்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் உடல் முன்னேற்றம்

### 1. அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி உபகரணங்களினை வழங்குதல்.

- **உதவி உபகரணங்கள்**

இது தொடர்பில் ரூபா. 8.54 மில்லியன் செலவு செய்யப்பட்டு 11 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் நிதி அனுசரணைகள் 7, கையூன்றுகோல்கள் 6, நடப்பதற்கான உதவி உபகரணங்ள் 6, சக்கர நாற்காலிகள் 13, செயற்கைக் கால்கள் 10, காது கேட்கும் கருவிகள் 4, மூக்குக் கண்ணாடிகள் 5,730, 13 தொலைதூர மற்றும் அருகிலுள்ள பார்வைக் கண்ணாடிகள் மற்றும் விசேட காலணி 1 ம் வழங்கப்பட்டுள்ளது.

- **மருத்துவ உதவி**

ரூபா. 7.20 மில்லியன் செலவு செய்யப்பட்டு 421 அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- **கல்வி உதவி**

ரூபா. 4.63 மில்லியன் செலவு செய்யப்பட்டு 419 அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு கல்வி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- **சுய தொழில் உதவி**

ரூபா. 3.78 மில்லியன் செலவு செய்யப்பட்டு 119 அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- **தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.**

இதன் கீழ் ரூபா. 0.10 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதுடன் 1 நபர் தொடர்பில் சம்பளத்தில் 50% கொடுப்பனவு இடம்பெற்றுள்ளது, அதேபோல பீசாகட் நிறுவனத்திற்கு 21 பேர் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

- **விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவிகளினை வழங்குதல்.**

ரூபா. 5.25 மில்லியன் செலவு செய்யப்பட்டு ஊழியர்களின் சம்பளம், நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் செலுத்துவது இடம்பெற்றுள்ளது.

- **வீடமைப்பு உதவிகள்**
  - சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்திலிருந்து 5% வீடமைப்பு நிதியத்திற்கு ஒதுக்கீடுகள் கிடைக்கின்றன என்பதுடன், ரூபா. 12.94 மில்லியன் செலவு செய்யப்பட்டு 144 வீட்டு அலகுகள் தொடர்பில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.
  - ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான அவசர உதவிச் செயற்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வூட்டுதல் மற்றும் பயன்களினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ரூபா. 0.93 மில்லியன் செலவு செய்யப்பட்டு 11 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுதல்.

**01. மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குதல்.**

- அங்கவீனமுற்ற நபர்களுக்காக வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு தொடர்பில், ரூபா. 3,702.61 மில்லியன் செலவு செய்யப்பட்டு 72,000 வழமையான பயனாளிகள், 17,882 மேலதிக கொடுப்பனவுகள், காத்திருப்புப் பட்டியலிலுள்ள 16,139 பயனாளிகளுக்கு அக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.
- சிறுநீரக நோயாளர்களுக்காக வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பவினை வழங்குவதற்கு, ரூபா. 1,930.98 செலவு செய்யப்பட்டு 39,150 வழமையான பயனாளிகள், 18,159 மேலதிகமான கொடுப்பனவுகள மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ள 1,924 பயனாளிகளுக்கு அக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

## 02. பிற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

# 6.13 முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)

## அறிமுகம்

இலங்கை வாழ் முதியோர் சமுதாயத்தின் உரிமைகளினைப் பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் தனித்துவமான வாய்ப்பொன்றாக 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சட்டத்தினைக் கொண்டு திருத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க முதியோர் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினூடாக முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தினை அமைத்தல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## கடமைப் பொறுப்பு

- முதியோர்களுக்கு அரவணைப்பு, பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை வழங்குதல் குடும்பத்தினூடாக நிறைவேற்ற வேண்டிய செயற்பாடு என்பதை சமுதாயத்திற்கு உணர்த்துதல்.
- முதியோர்களினைப் பாதுகாப்பதற்காக பிரத்தியேகப் பிரிவின் முதலீட்டு வாய்ப்புக்களினை அதிகரித்தல்.
- முதியோர்களின் இயலுமைகள், திறன் விருத்தியினூடாக வருமானங்களினைப் பெருக்கும் வழிகளுக்கு முன்வைத்தல்.
- விழிப்புணர்வினை வளர்ப்பதனூடாக ஓய்வுகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளினைச் சமாளிப்பதற்கு தயார்படுத்துதல்.
- உதவி தேவைப்படும் முதியோர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.

## 30.09.2023 வரை முக்கிய வளர்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் உடல் முன்னேற்றம்

### 1. முதியோர்களுக்கு உதவிகளினை வழங்குதல்

- 385 முதியோர்களுக்கு சுயதொழில் உதவிகளினை வழங்குதல் - (செலவு ரூபா. 19.41 மில்லியன்)
- எந்தவித வருமானமொன்றுக்கும் உரித்தினைக் கொண்டிராத, நாள்பட்ட தொற்றாத நோய்களினால் பீடிக்கப்பட்ட முதியோர்களுக்கு ரூபா. 25,000 என்றவாறு வழங்கப்படும் “ஆரோக்யா” மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1,160 முதியோர்களுக்கு பயன்களினை வழங்குதல் - (செலவு ரூபா. 29.53 மில்லியன்)
- குறைந்த வருமானப் பயனாளிகளான 822 மூத்த பிரஜைகளுக்கு செவிப்புலக் கருவிகளினை வழங்குதல் - (ரூபா. 22.59 மில்லியன்)
- குறைந்த வருமானப் பயனாளிகளான 509 மூத்த பிரஜைகளுக்கு கண் வில்லைகளின் வழங்குதல் - (ரூபா. 3.61 மில்லியன்)
- 1,333 முதியோர்களுக்கு சுகாதார முகாம்களினை நடாத்துதல் - (செலவு ரூபா. 2.35 மில்லியன்) இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2. முதியோர் இல்லங்கள் மற்றும் பகல்நேர நிலையங்களினை முன்னெடுத்துச் செல்லுதல்.

- பன்னல “Welcome Villlage” முதியோர் இல்லத்தின் பராமரிப்பு மற்றும் நிர்வாகம் (செலவு ரூபா. 21.11 மில்லியன்)
- சரண முதியோர் இல்லத்தின் நிர்வாகம் (தெகிஅத்தகண்டிய) - (செலவு ரூபா. 0.12 மில்லியன்)
- கதிர்காமம் முதியோர் இல்லத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் - (செலவு ரூபா. 0.86 மில்லியன்)

- கதிர்காமம் முதியோர் இல்லத்தின் நிர்மாணிப்புச் செயற்பாடுகள் - (செலவு ரூபா. 67.91 மில்லியன்/பௌதிக முன்னேற்றம் 48%)
- 19 முதியோர் இல்லங்களினை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல் - (செலவு 10.93 மில்லியன்)
- 16 முதியோர் பகல்நேர நிலையங்களினை நிர்மாணித்தல் - (செலவு ரூபா. 45.75 மில்லியன்)
- 9 முதியோர் பகல்நேர நிலையங்களுக்கு உபகரணங்களினை கொள்வனவு செய்தல் - (செலவு ரூபா. 5.75 மில்லியன்)

இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 12. முதியோர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளினை வழங்குதல்

- 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு முதியோர் கொடுப்பனவினை வழங்குதலின் கீழ் வழமையான பயனாளிகள் - 416,667, மேலதிகமான கொடுப்பனவுகள் - 217,995 மற்றும் காத்திருப்புப் பட்டியலுலுள்ள 94,791 பேருக்கான கொடுப்பனவுகள் இடம்பெற்றுள்ளன. (நிதி முன்னேற்றம் - ரூபா. 15,905.85 மில்லியன்)

- 100 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு முதியோர் கொடுப்பனவினை வழங்குதலின் கீழ் வழமையான பயனாளிகள் - 465, மேலதிகக் கொடுப்பனவுப் பயனாளிகள்- 239 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. (நிதி முன்னேற்றம் - ரூபா. 22.92 மில்லியன்)

## 13. முதியோர் சங்கங்களினை வலுவூட்டுதல்

- கிராமிய மட்டத்தில் 421 முதியோர் சங்கங்களினை வலுவூட்டுதல் - (செலவு ரூபா. 41.87 மில்லியன்)
- தேசிய முதியோர் சங்கங்களினை அமைத்தல் (செலவு ரூபா. 0.46 மில்லியன்)
- மாவட்ட முதியோர் சங்கங்களினை விழிப்புணர்வூட்டும் கூட்டம் 1 நடாத்தப்படுதல்.

## 14. முதியோர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல்.

- “திரிய பியச” குறைந்த வருமானப் பயனாளி முதியோர்களுக்கு 49 இல்லங்களினை நிர்மாணித்தல்/பழுதுபார்த்தல் - (செலவு ரூபா. 34.95 மில்லியன்)
- “சுவ பகசு” நிதியுதவித் திட்டத்தின் கீழ் 1,784 முதியோர்களுக்கு தங்களின் வீடுகளில் வாழ்வதற்கென தேவையான குறைந்தபட்ச வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளினை வழங்குதல் - (செலவு ரூபா. 93.25 மில்லியன்)

இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 15. விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

- 192 முதியோர் இல்லங்களின் காப்பாளர்களுக்கு சுகாதார அமைச்சுடன் இணைந்து முதியோர்களினைப் பாதுகாக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். - (செலவு ரூபா. 2.01 மில்லியன்)
- கிராம முதியோர் சங்கங்களின் பொருளாளர்களுக்கு, 125 திறன் விருத்தி செயலமர்வுகளினை நடாத்துதல் (செலவு ரூபா. 3.70 மில்லியன்)
- முதியோர் பகல்நேர நிலையங்களில் டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் முதியோர்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்கு 21 யோகா ஊக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - (செலவு ரூபா. 3.61 மில்லியன்)
- முதியோர்களுக்கான யோகப் பயிற்சிகள் மற்றும் எளிய பயிற்சிகளுக்கு பயிலுனர்களினைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல். - (செலவு ரூபா. 1.33 மில்லியன்)
- ஓய்வு வாழ்கை தொடர்பில் பள்ளி மாணவர்கள் மற்றும் ஓய்வெடுக்கவுள்ள நபர்களுக்கு 19 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 16. அமுலாக்கப்பட்ட பிற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.

- 57 மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல் - (திறைசேரி ஒதுக்கீடுகள் - ரூபா. 0.18 மில்லியன், முதியோர் பாதுகாப்பு நிதி - ரூபா. 1.09 மில்லியன்)
- 235 முதியோர் மதச் சுற்றுலாக்களினை ஒருங்கிணைத்தல் - (முதியோர் பாதுகாப்பு நிதி - ரூபா. 17.29 மில்லியன்)
- 23,503 முதியோர் அடையாள அட்டைகளினை வழங்குதல் (திறைசேரி ஒதுக்கீடுகள் - ரூபா. 0.37 மில்லியன்)
- முதியோர் பராமரிப்புச் சபையின் 100 முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்குதல் (திறைசேரி ஒதுக்கீடுகள் - ரூபா. 1.20 மில்லியன்)
- 6 கள ஆய்வுகளினை நடாத்துதல் (திறைசேரி ஒதுக்கீடுகள் - ரூபா. 0.80 மில்லியன்)

# 6.14 இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)

## அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சமூகப் பாதுகாப்புச் சபை சட்டத்தினூடாகவும் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தப்பட்ட) சட்டத்தினூடாகவும் நிறுவப்பட்டு அமுலாக்கப்பட்டுவரும் அரச நியதிச்சட்ட நிறுவனமொன்றாகும். அரச ஓய்வூதியமொன்றுக்கு உரித்தினைக் கொண்டிராத சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைகள் திட்டத்தினை அமுலாக்குதல் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

## கடமைப் பொறுப்பு

- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அவர்களின் வயோதிபக் காலத்தில் அல்லது அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்படும்போது, அக்காலத்தில் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மரணிக்கும்போது, அவர்களில் தங்கிவாழ்வோருக்கு நிவாரணத்தினை வழங்குதல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களினை உரிய தொழிற் பயிற்சிகளில் ஈடுபடும்படி வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
- சுய தொழில்களில் ஈடுபடுமாறு இளைஞர்களினை வலுவூட்டுதல், அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
- சிக்கனம் மற்றும் வள முகாமைத்துவத்தின் பயன்கள் தொடர்பில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களினை விழிப்புணர்வூட்டுதல்.
- சுய தொழில் செய்பவர்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

**பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2023.09.30 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.**

### i. சுயதொழில் செய்பவர்களுக்கும் மற்றும் அவர்களில் சார்ந்திருப்போர்களுக்கும் பயன்களினை வழங்குதல்.

- ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன் பிரேரணைகள் திட்டத்திற்கு 32,423 அங்கத்தவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், ரூபா. 74.87 மில்லியன் அறவீடு செய்யப்பட்டுள்ளது.
- 34,717 அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியமாக ரூபா. 303.34 மில்லியன் கொடுப்பனவுகள்
- 41 அங்கத்தவர்களுக்கு மரணப் பணிக்கொடை, பகுதியளவிலான அங்கவீனர் பணிக்கொடை மற்றும் முழுமையான அங்கவீனர் மாதாந்தக் கொடுப்பனவுகளாக ரூபா. 1.54 மில்லியன் வழங்குதல்.
- 475 அங்கத்தவர்களுக்கு மேலதிகப் பயன்கள் (5 ஆந் தரப் புலமைப் பரிசில், க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) ஆக ரூபா. 5.119 மில்லியன் வழங்குதல்.

### 1. சுய தொழில்களில் ஈடுபடுமாறு இளைய சமூத்தினை விழிப்புணர்வூட்டுதல், அவர்களின் திறன்கள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.

- இளைஞர் சமுதாயத்தினை சுயதொழிலுக்கு முன்வைப்பதனை ஊக்குவித்தல் மற்றும் முயற்சிப்பு செய்வதற்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து இளைஞர் குழுக்களினை இலக்காகக் கொண்டு, விழிப்புணர்வு மற்றும் ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல். (இது வரையில் 12 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன)

- பாடசாலை மாணவர் சமூகத்தில் சமூகப் பாதுகாப்பு தொடர்பிலான அறிவு, தேவையினை பிரபலப்படுத்துதல், குழந்தைப் பருவத்திலிருந்தே வளங்களினை நிர்வகித்தல், சார்பு மனப்பான்மையிலிருந்து விடுபடுதல், ஒவ்வொரு தொழிலுக்கும் சரியான தொழில்முறை கண்ணியம் வழங்குவது போன்ற நிபந்தனைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களினை விழிப்புணர்வூட்டுவதற்கு நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் (இதுவரையில் 50 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன)
- சமூகப் பாதுகாப்பு தொடர்பான அறிவினைப் பிரபலப்படுத்துவதற்கு சமூகப் பாதுகாப்பு தொடர்பிலான பாடசாலை விதானத்தினுள் சேர்த்தல் (தேசியக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து முன்மொழியப்பட்ட புதிய பாடசாலைப் பாடதிட்டத் திருத்தத்தில், பாடசாலை விதானத்தினுள் சமூக பாதுகாப்புக்கான பாட விடயங்களினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் "குடியுரிமை ஆய்வு" பாடத்திட்டத்தின் கருத்தியல் கட்டமைப்புக்குள் பாடவிடயம் சேர்க்கப்பட்டுள்ளது.

### iii. சுயதொழில் செய்பவர்களினை அந்தந்த தொழில்களில் ஈடுபட ஊக்குவித்தல், சிக்கனம் மற்றும் வள முகாமைத்துவத்தின் பயன்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல்.

- சுயதொழில்கள் தொடர்பில் ஊக்குவித்தல், அது தொடர்பில் தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு பிரேரணை திட்டங்களினை அறிமுகப்படுத்துதல், சிக்கனம் மற்றும் 2338 வள முகாமைத்துவத்திற்கான நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- குறிப்பிட்ட தொழில் துறைகளில் ஈடுபடுபவர்களினை அவர்களின் தொழில்களில் ஈடுபடுமாறு ஊக்குவிப்பதற்கு விசேட பயன்களுடனான ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு பிரேரணை திட்டங்களினை அறிமுகப்படுத்துவதுடன், அதன் பிரகாரம் கடல்சார் துறைக்கான "மாலுமி" சமூகப் பாதுகாப்பு பிரேரணை திட்டம், வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர்கள் தொடர்பில் "மனுசவி" ஓய்வூதியப் பிரேரணை திட்டம் மற்றும் கலைத்துறையில் உள்ளோர்களுக்கு "கலைஞர்கள்" ஓய்வூதியப் பிரேரணைத் திட்டம் போன்ற பிரேரணை திட்டங்கள் மூலம் 526 நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு சான்றிதழ்களினை வழங்குதல்.

# 6.15 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

## அறிமுகம்

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினூடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரில் உயர் கல்வி நிறுவனமொன்றாக நிறுவப்பட்டுள்ள இந்நிறுவனம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழ் பட்டத்தினை வழங்குவதற்கு அதிகாரத்தினைக் கொண்ட நிறுவனமாக 2005 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், சமூகப் பணி (Social Work) தொடர்பிலான கல்வியினை வழங்கும் இலங்கையிலுள்ள ஒரேயொரு அரச நிறுவனமாகும்.

நிறுவனத்தின் மையப் பிரிவான நிர்வாக சபையின் (Governing Council) ஊடாக நிறுவனத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிதிசார் செயற்பாடுகள் அமுலாக்கப்படுகின்றன. நிர்வாக சபையின் கீழ் அமுலாக்கப்படும் கல்விசார் விவகார சபையினூடாக (Academic Affairs Board) நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல் வழங்குதல் இடம்பெறுகிறது.

நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஒன்றோடொன்று தொடர்புடைய 4 முக்கியமான பிரிவுகளினைக் கொண்டு அமுலாக்கப்படுகிறது. அவை,

1. சமூக சேவைகள் கல்லூரி
2. பயிற்சிப் பிரிவு
3. சமூக மேம்பாடு, கொள்கைகள், ஆய்வுகள் மற்றும் வெளியீட்டுப் பிரிவு
4. நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு

## கடமைப் பொறுப்புக்கள்

- சமூகப் பணி, சமூக அபிவிருத்திக் கல்வியினை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பணிச் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு அமைச்சருக்கு உதவியினை வழங்குதல்.
- சமூகப் பணி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலான பட்டம் மற்றும் முதுகலைப் பாடநெறிகளினை நடாத்துதல்.
- சமூக நலன்புரித் திட்டங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் கல்விச் செயற்பாடுகளினை நடாத்துதல் மற்றும் அவற்றினை மேம்படுத்துதல்
- சமூகப் பணிகளில் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட சமூகப் பணி மற்றும் சமூக மேம்பாட்டுக் கல்வி நடைமுறையில் ஆக்கபூர்வமான நடைமுறையினைத் தொடங்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2023.09.30 வரையான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

### தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தொடர்பில் சீதுவப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டிட வளாகம்.

A மற்றும் B என்றவாறு இரு பகுதிகளினைக் கொண்ட கட்டிடத்தின் கட்டுமானம் 2017.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஒக்டோபர் மாதம் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டபோதிலும் திட்டமிடப்பட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டுள்ளது.
இக்கட்டிடம் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 1000 மில்லியனாவதுடன் 2017.01.01 ஆந் திகதி தொடக்கம் 2023.09.30 ஆந் திகதி வரை ரூபா. 853.03 மில்லியன் நிதிசார் முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. A பிரிவின் கட்டுமானத்திற்கு 98.14% பௌதிக முன்னேற்றமும், B பிரிவின் கட்டுமானத்தனிற்கு 100% முன்னேற்றமும் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

## 2. திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்

- **பட்டம் மற்றும் டிப்ளோமாப் பாடநெறிகள்**
  - சமூகப் பணியில் இளங்கலைப் பட்டப் பாடநெறியில் 871 மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளினை முன்னெடுத்துள்ளனர் (செலவு ரூபா. 2.98 மில்லியன்).
  - சமூகப் பணி தொடர்பிலான இளங்கலைப் பட்டப் பாடநெறியினைத் தொடரும் 258 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிகளினை வழங்குதல். (செலவு ரூபா. 1.08 மில்லியன்).
  - உளவளத்துணை இளங்கலைப் பட்டப் பாடநெறியின் விடயப் பரிந்துரைக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின அங்கீகாரத்தினைப் பெறுவதற்காக திருத்தப்பட்ட முன்மொழிவினை மீளவும் முன்வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.
  - சமூகப் பணி ஆய்வு தொடர்பிலான சான்றிதழ் பாடநெறியின் பாடத் திட்டம் குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
  - பெண்கள் வலுவூட்டுதல் தொடர்பிலான டிப்ளோமாவின் பாடத்திட்டம் குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
  - சமூகப் பணியில் இளங்கலைப் பட்டப் பாடநெறியின் (2017/2018) பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டது.

- **பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**
  - பிற திணைக்களங்களின் வேண்டுகோளின் கீழ் அமுலாக்கப்படும் குறுகியகால பயிற்சிப் பாடநெறிகளின் கீழ் 20 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. (செலவு - ரூபா. 0.10 மில்லியன்)
  - முகவர் துறைகள் மற்றும் பீட மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சியளிக்கும் செயற்பாடுகளுடன் தொடர்பிலான 02 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
  - பணியாளர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (100%)

- ***ஆய்வுப் பிரிவினால் வெ ளியிடப்பட்டுள்ள வெளியீடுகள்***
  - சமூகப் பணி தொடர்பிலான இரு ஆண்டு பிரசுரங்களினை வெளியிடுதலின் கீழ் 04 சஞ்சிகைகள் மற்றும் 2 News letter வெளியிடப்பட்டுள்ளன. (செலவு - ரூபா. 0.10 மில்லியன்)
  - சமூக மேம்பாட்டில் இளங்கலைப் பட்டம் தொடர்பிலான பாடத்திட்ட மேம்பாட்டுத் தேவை குறித்து ஆய்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. (60%)
  - சமூகப் பணி தொடர்பிலான சர்வதேச மாநாட்டிற்கான ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. (70%)
  - சமூகக் கொள்கைகள் தொடர்பிலான அறிக்கை III ஐ வெளியிடுவதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (60%)

## 3. பணம் அறவீடு செய்யப்படுவதன் மூலம் அமுலாக்கப்பட்ட பாடநெறிகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

### i. பட்டம் மற்றும் டிப்ளோமாப் பாடநெறிகள்

- 2020/2021 தொகுதியின் 57 மாணவர்களுக்கு உயர் ஆய்வுப் பயிற்சியினை நடாத்துதல்.
- 2021/2022 மாணவ தொகுதியின் 83 மாணவர்களுக்கு வகுப்பறை விரிவுரைகள் நடாத்தப்படுதல்.
- 623 பயனாளிகளுக்கு உளவளத்துணை தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறியினை நடாத்துதல். (செலவு - ரூபா. 2.48 மில்லியன்)
- 21 பயனாளிகளுக்கு உளவளத்துணை தொடர்பிலான உயர் டிப்ளோமாப் பாடநெறியினை நடாத்துதல். (செலவு ரூபா. 0.81 மில்லியன்)
- சமூகப் பணியில் முதுகலைப் பாடநெறி (MSW)2019/2020 கல்விசார் வருடத்தின் (ஆங்கில மொழி) பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டுள்ளது. (08 மாணவர்கள்)

### ii. சான்றிதழ் பாடநெறிகள்

- சமூக மேம்பாடு (சிறுவர்) தொடர்பிலான சான்றிதழ் பாடநெறிக்கு 500 மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

# 6.16 கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

## அறிமுகம்

கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம், 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது, 1978 ஆம் ஆண்டில் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் மூலோபாயமொன்றாக, அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரங்கப்பட்டப்பட்ட அல்லது பின்தள்ளப்பட்ட வறிய சமுதாயத்தின் சாத்தியமான ஆற்றலினை உயர்த்தி, அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் கூட்டுத்தன்மையினை வளர்த்துக் கொள்ளுவதற்கு பங்களிப்பு மேம்பாட்டு எண்ணக்கருவின் அடிப்படையிலான வேறுபட்ட செயற்பாட்டுப் பயிற்சி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக புதிய அபிவிருத்தி மூலோபாயமொன்றினை அறிமுகப்படுத்திய தேசிய நிறுவனமொன்றாகும். உற்பத்தியின்போது, வறிய சமுதாயத்தின் சமூகப் பொருளாதார செயற்பாட்டினூடாக அவர்கள் முகங்கொடுக்கும் பாதகமான நிலைமையினை மிகவும் சாதகமான நிலைமையாக முழுமையாக மாற்றுவதற்கு தேவையான வலுவூட்டும் வினையூக்க செயல்முறை இந்நிறுவனத்தின் கடமைப் பொறுப்பொன்றாகும்.

## கடமைப் பொறுப்பு

- சமூக வளர்ச்சியில் அறிவு முகாமைத்துவம்
- சமூக வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனினை அதிகரித்தல்.
- புதுமையான வளர்ச்சி அணுகுமுறைகளினை அறிமுகப்படுத்துதல்.

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2023.09.30 வரையான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

### ஆராய்ச்சி, ஆய்வுகள் மற்றும் கற்கை ஆய்வுகள்

- சமுதாயத்தின் உணவு உரிமையினைப் பாதுகாத்தல் மற்றும் திருப்தியினை அதிகரிப்பதற்கும் தெருவோர வியாபாரிகள் மீது பயனுள்ள ஆய்வு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.
- தொழில் வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பயனாளி குடும்பங்களின் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.
- சௌபாக்யா கிராமங்கள் தொடர்பிலான ஆய்வு நிறைவு பெற்றுள்ளதுடன் அது தொடர்பிலான 20 அறிக்கைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- பெண்களின் பொருளாதார நிலை தொடர்பில் நுண் நிதி நிறுவனங்களின் கடமைப் பொறுப்பு பற்றிய ஆய்விலிருந்து சேகரிக்கப்பட்ட தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது.

### பயிற்சி மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினை மத்தியஸ்தர்களாகக் கட்டியெழுப்புவதற்கான பயிற்சிகள் மற்றும் மத்தியஸ்தம் தொடர்பிலான 6 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களின் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் தலையீடுகள் மற்றும் வீட்டு முகாமைத்துவம் தொடர்பிலான ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் 01 நடாத்தப்பட்டுள்ளது.
- நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு 12 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## வெளியீடுகள்

- பிரஜாசக்தி இலத்திரனியல் இதழின் முதல் தொகுதி இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு, இரண்டாம் பாகத்தின் திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நிறுவனத்தின் அபிவிருத்திச் செய்திகள் இலத்திரனியல் ஊடகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
- நூலகத்தின் வளர்ச்சியின் கீழ் (SCAN) செய்யப்பட்ட 04 கட்டுரைகள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.
- நிறுவனத்தின் வசதிகள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட 02 துண்டுப் பிரசுரங்கள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

## அமுலாக்கப்பட்ட பிற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.

- நிறுவனத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் தொடர்பிலான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 09 நடாத்தப்பட்டுள்ளன.

## 2023 ஆம் ஆண்டின் வருவாய்

பொரளை மற்றும் பிலிமத்தலாவ நிலையங்களிலுள்ள விடுதிகள் மற்றும் விரிவுரை மண்டபங்களினை வெளி நிறுவனங்களுக்கு வழங்கியதன் மூலம் ரூபா. 2.246 மில்லியன் வருமானம் பெறப்பட்டுள்ளது.

# 6.17 உளவளத்துணைப் பிரிவு

## அறிமுகம்

சமூகம் எதிர்கொள்ளும் உளநலப் பிரச்சினைகள், உள ஏற்றத் தாழ்வுகள் மற்றும் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்கு, உளவியல் ஆலோசனை மற்றும் சிகிச்சைசார் முறைகளினைப் பயன்படுத்தி உளத்தினை சிறந்தவாறு கட்டியெழுப்புதல் இப் பிரிவினூடாக இடம்பெறுகிறது.

## கடமைப் பொறுப்பு

- மக்கள் எதிர்கொள்ளும் உளநலப் பிரச்சினைகள், உளநலக் கோளாறுகள், உளநோய்கள் மற்றும் பல்வேறு உளவியல் சிக்கல்களினைக் கண்டறிந்து அந்த நிலைமைகளினைக் குறைப்பதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டும் குழு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.
- சமுதாயத்தினை உள ரீதியில் வலுவூட்டுவதற்கு உளவியல் உளவளத்துணை தலையீட்டினைப் பயன்படுத்தி விழிப்புணர்வூட்டும் குழு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- உளநலக் குறைபாடுகள் மற்றும் உளவியல் சிக்கல்களுடன் வருகைதரும் வாடிக்கையாளர்களுக்கு தரமான உளவளத்துணை சேவைகளினை வழங்குவதன் மூலம் உளலநத்தினைக் கட்டியெழுப்புதல்.
- கையடக்கத் தொலைபேசி உளவளத்துணை சேவையினூடாக தனிநபருக்கு உளவளத்துணை சேவைகளினை வழங்குதல்.
- சமூக உணர்திறன் அதிகம் தேவைப்படும் சமூகக் குழுக்களினைக் கண்டறிந்து அவர்களின் உள நலனை மேம்படுத்தும் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2023.09.30 வரையான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

- உள நோய்கள், உளச் சிக்கல்கள் மற்றும் பல்வேறு உளவியல் சிக்கல்களினைக் குறைப்பதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் 256,126 பயனாளிகளுக்கு 6,183 உளவத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- உளநலக் கோளாறுகள் மற்றும் சிக்கலான சூழ்நிலைகளுடன் வருகைதரும் வாடிக்கையாளர்களுக்கு 16,150 பிரத்தியேக உளவளத்துணை சேவை அமர்வுகளினை நடாத்துதல்.
- கையடக்க தொலைபேசி உளவளத்துணை சேவையூடாக 2,986 பயனாளிகளின் தொலைபேசி அழைப்புக்களினூடாக சேவையினை வழங்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களின் 22 உள ஆரோக்கியத்தினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களினை 22 மாவட்டங்களினூடாக அமுலாக்குதல் (ரூபா. 0.498 மில்லியன்)
- உலக உள ஆரோக்கிய தினத்திற்கு இணையாக அமைச்சுக்களின் மட்டம், மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களின் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் 24, 1500 பயனாளிகளின் பங்குகொள்ளலுடன் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- உளவியல் உளவளத்துணை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் (உளவளத்துணை) மற்றும் உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்களுக்கு உளவியல் உளவளத்துணை களத்துறையுடன் தொடர்பிலான 04 நிகழ்ச்சித் திட்டங்கள் ஆசிய மன்றத்தின் நிதிப் பங்களிப்புடன் நடாத்தப்படுதல்.
- இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் (கண்காணிப்பு மட்டம்) தொடர்பில் 09 உள ஆரோக்கிய மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.
- கந்தக்காடு, சேனாபுர, வவுனியா நிலையங்களில் ஆபத்தான போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் இழந்த போராளிகளுக்கு மறுவாழ்வளிப்பதற்கு இடம்பெற்ற 90 குழு உளவளத்துணை

நிகழ்ச்சித் திட்டங்கள், 610 பயனாளிகள், 01 யோகா நிகழ்ச்சித் திட்டங்கள் (40 பயனாளிகள்), 1 இசை இன்ப நிகழ்ச்சித் திட்டம் (200 பயனாளிகள்) நடாத்தப்படுதல்.

- உளவளத்துணை சேவைகளின் தேவைப்பாடுகளினைக் கொண்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உளவளத்துணை உத்தியோகத்தர்களின் சேவையினை வழங்குதல் (மருத்துவசாலைகள், சிறைச்சாலைகள், சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள், விமான சேவைகள் கம்பனி)

அநேகமான நிகழ்ச்சித் திட்டங்கள் ஒதுக்கீடுகளற்று அமுலாக்கப்படுவதுடன், நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு செலவு செய்யப்பட்ட திறைசேரி ஒதுக்கீடுகள் ரூபா. 0.65 மில்லியனாகும்.

# 6.18 பிற தொழிற்பாட்டுப் பிரிவுகள்

## நிர்வாகப் பிரிவு

அமைச்சு மற்றும் இணை நிறுவனங்களின் மனித வளங்கள் மற்றும் பௌதிக வள முகாமைத்துவம் தொடர்பிலான தாபன விதிக் கோவைகள், சுற்றுநிரூபங்களுக்கிணங்க மற்றும் தருணங்களுக்கமைவாகச் செயற்படுவதற்காக நிர்வாகப் பிரிவு அமுலாக்கப்படுகிறது. நிர்வாகப் பிரிவினூடாக பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும் நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு வினைத்திறனான சேவையொன்று வழங்கப்படுகிறது.

- அமைச்சு மற்றும் அமைச்சுக்கு உரித்தான சகல நிறுவனங்களின் பதவியணிக்கான நிறுவனம்சார் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளினை கண்காணித்தல்..
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளினை வழங்குவதனூடாக மனித வளத் திறனினை மேம்படுத்துதல்.
- அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான அமைச்சவை விஞ்ஞாபனங்கள், சட்டங்கள், வரைவுகள் போன்றவற்றினை சரியானவாறு முன்வைத்தலினூடாக கொள்கை வடிவமைப்புக்கு பங்களிப்புச் செய்தல்.
- தேவையான மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

அதன் பிரகாரம், மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதலின் கீழ் 5 திறன், அறிவு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உளப்பாங்கு விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றும், முறையே உத்தியோகத்தர்கள் 299 மற்றும் 107 பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டுள்ளது. அதேபோல 9 பிரத்தியேக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 66 உத்தியோகத்தர்கள் முன்வைக்கப்பட்டுள்ளனர். பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்துவத்தினை புதுப்பிப்பதற்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## அபிவிருத்திப் பிரிவு

இவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் நோக்கங்களினை அடையும் பொருட்டு ஆலோசனைகளினை வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் தொழிற்படுத்துதலினை முன்னெடுத்தல் இப்பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும். மேலும் பின்வரும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கண்காணிப்புச் செயற்பாடுகளும் இப்பிரிவினூடாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

1) 2022/2023 ஆம் ஆண்டின் உயர் பருவத்தின் அரசின் நெல்லினைக் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தி, அங்கவீனர், முதியோர் மற்றும் சிறுநீரகக் கொடுப்பனவுப் பயனாளிகள் மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், குடும்பமொன்றுக்கு 10 கிலோ கிராம் அரிசி என்றவாறு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் (அரிசி 177,129.24 மெட்றிக் தொன், 2,709,469 பயனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.)
2) அமுலாக்குவதற்கு எதிர்பார்த்த தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகத்தினை அமைச்சினுள் அமைப்பதற்கு தேவையான பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்படுதல்.

## கணக்குகள் பிரிவு

செயற்பாடு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வருடாந்த ஒதுக்கீடுகளினை வழங்குதல், முகாமை செய்தல், கொடுப்பனவுகளினை முன்னெடுப்பதுடன், அரச கணக்குகளினை முன்னெடுப்பதை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுத்தல், நிதிப் பிரமாணங்களினூடாக

பிரதான கணக்கீட்டு உத்தயோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை ஒழுக்கத்துடன் முன்னெடுத்துச் செல்லுதல் ஒப்படைக்கப்படிருக்கும் பிரிவு கணக்குகள் பிரிவாகும்.

அமைச்சுப் பிரிவின் கணக்குகள் செயற்பாடுகள் மற்றும் மொத்தக் கொள்முதல் நடைமுறையினை முன்னெடுப்பதற்கு மேலாக, திணைக்களங்கள். நியதிசட்ட நிறுவனங்கள் மற்றும் சபைகளின் கணக்குகளினை கண்காணித்தலும் இடம்பெறுகிறது.

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமைச்சின் செயலாளருக்கு நேரடியாகப் பொறுப்பினைக் கூறும் பிரதான உள்ளகக் கணாக்காய்வாளர் ஒருவரின் கீழ் செயலாக்கப்படுவதுடன், அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சேவைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை தரமானதாகவும் மற்றும் வினைத்திறனாகவும் முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான நிதியினைக் கணக்காய்வு செய்தல், செயற்திறன் கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு, சுற்றுச்சூழல் கணக்காய்வு, திட்ட நிர்வாகக் கணக்காய்வு மற்றும் கவனத்திற்குக் கொள்ளக்கூடிய துறைகளினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினை முன்னெடுப்பதனூடாக, எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு வழிகாட்டல்களினை வழங்குவதும் இடம்பெறுகிறது.

## திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு (சமூக வலுவூட்டல்)

சமூக வலுவூட்டல் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயப்பரப்புக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்களினைத் திட்டமிடுவதற்குத் தேவையான வசதிகளினை வழங்குதல், அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயற்படுத்துதல், முன்னேற்றத்தினை முகாமை செய்தல் மற்றும் பிற நேர் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்ளினை ஒருங்கிணைத்தல், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு விடயப் பரப்பின் கீழ் இடம்பெறுகிறது.

# 6.19 அமுலாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்.

## சட்டம், கட்டளைகள் மற்றும் திட்டமுன்மொழிவுக்கான எதிர்கால செயற்பாடு

- பழைய சட்டங்கள் மற்றும் தங்குமிட கட்டளைச் சட்டங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தல்
- ஒன்றிணைந்த செயற்பாடுகளோ்டு தேசிய மட்டத்தில் அமைச்சின் பல்வேறுபட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் மாவட்ட, பிரதேச மற்றும் அடிமட்டங்களில் அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான கொள்கையொன்றினை அறிமுகம் செய்தல்
- ஒன்றிணைந்த செயற்பாடுகள் மூலம் குடும்ப வலுவூட்டலக்கான கொள்கைத்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக மூலோபாயத்திட்டமொன்றினை வடிவமைத்தல் .
- முதியோர்களுக்கான தற்போதய தேவைகளினை நிறைவேற்றிக்கொள்வதன் பொருட்டு கொள்கை மாற்றங்களை மேற்கொள்ளுதல்
- தன்னார்வ வேலைகளின் பொருட்டு தேசிய கொள்கைகள் குறித்த எதிர்கால நடவடிக்கை எடுத்தல்
- பெண்களுக்கான தற்காலிக பாதுகாப்பு இல்லத்தனை பராமரிப்பதற்கான வழிகாட்டநூலை வெளியீடு செய்தல்
- பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை குறைப்பதற்கான ஐந்துவருட தேசிய கொள்கை திட்டத்தினை (2024 -2028) அமுல்ப்படுத்துதல்
- பெண்களின் அமைதி மற்றும் பாதுகாப்புடன் தொடர்பு பட்ட தேசிய செயற்றிட்டத்தில் அமுல்ப்படுத்தப்படாத செயற்பாடுகளினை அமுல்ப்படுத்துதல்
- பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுப்படுத்தல் பொருட்டு தேசிய கொள்கையோடு தேசிய செயற்றிட்டத்தினை அமுல்ப்படுத்துதல்
- சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கை திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை குறைத்தல்,சிறுவர் பாதுகாப்பு மற்றும் அரவணைப்புக்கான புதிய முறைகளை தயாரித்தல்
- தற்பொழு அமுலிலுள்ள சமூக வலுப்படுத்துகை கொள்கையினை வலுவூட்டுதல் மற்றும் புதிய முறைகளை அறிமுகப்படுத்துதல்
- முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு தொடர்பான வழிகாட்டலை தயாரித்து அமுல்ப்படுத்தல்

### ஏணைய நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்கள்

- “அஸ்வசும” சமூக நலன் பயன் பிரேரணைகள் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட 1.2 மில்லியன் வறிய மற்றும் மிகவும் வறிய குடும்பங்களினை, 2024 - 2026 காலப்பகுதியினுள் வலுவூட்டுதல்.
- அரச தனியார் கூட்டு முயற்சியின் கீழ் கிளிநொச்சி வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவனத்தின் முன்னெடுக்கவுள்ள பணிகளினை நிறைவு செய்தல்.
- அரச தனியார் கூட்டு முயற்சியின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களினை பராமரிப்பதற்கு புவக்பிட்டிய நிறுவனத்தில் புதிய கட்டிடமொன்றினை நிர்மாணித்தல்.
- “அங்கவீனமுற்றோர் கற்கை ஆய்வுகள்” என்ற பாடத்தினை பல்கலைக்கழக திட்டம் மற்றும் பாடசாலைத் திட்டத்திற்கு அறிமுகப்படுத்துதல்.
- ஒருங்கிணைந்த அணுகுமுறையினூடாக பிள்ளைகள் மற்றும் முதியோர்களினைப் பராமரிப்பதற்கான தொழில் உருவாக்க நிகழ்ச்சித் திட்டம்.
- ஓய்வூதியப் பிரேரணைத் திட்டங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளினை மேலும் திறம்படச் செய்வதற்கு புதிய கணனிமயமாக்கப்பட்ட ஓய்வூதிய முகாமைத்துவ திட்டமொன்றினை நிறுவுதல் மற்றும் அங்கத்தவர்களின் விண்ணப்பங்களினை உள்ளிட்ட ஆவணங்களினை டிஜிட்டல் முறையில் கொண்டுவருதல்.
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினைப் பல்கலைக்கழகமாக உருவாக்குதல்.
- கிராம அபிவிருத்தியில் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறி
- பிரதேச செயலக தொகுதிகள் மட்டத்தின் இளைஞர் சங்கங்களின் இளைஞர் சமுதாயத்திற்கு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- சிறுவர்களுக்கான மாற்று பாதுகாப்பு வழிகளுக்கான கொள்கைகளை அமுல்படுத்துதல்.